தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

19.02.2013 A.M

## வீராணம் ஏரி வறண்டதால், கீழணையிலிருந்து தண்ணீர் திறப்பு

கடலூர் மாவட்டத்தில் உள்ள மிகப்பெரிய ஏரியான வீராணம் ஏரி வறண்டதால், கீழணையிலிருந்து ஏரிக்கு தண்ணீர் திறக்கப்படடுள்ளது.

கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகே உள்ள வீராணம் ஏரியின் மொத்தக் கொள்ளளவு 1465 மில்லியன் கனஅடியாகும். போதிய மழை இல்லாததாலும், காவிரியில் கர்நாடகம் தண்ணீர் திறந்துவிடப்படாததால் மேட்டூரிலிருந்து போதிய நீர் கிடைக்காததாலும் வீராணம் ஏரிக்கு நீர்வரத்து இன்றி படிப்படியாக குறைந்தது. இதனால் கடந்த வாரம் சென்னைக்குக் குடிநீர் அனுப்புவது நிறுத்தப்பட்டது. தற்போது திங்கள்கிழமை நிலவரப்படி வீராணம் ஏரியின் நீர்மட்டம் வெறும் 9 மில்லியன் கனஅடியாகக் குறைந்து வறண்டு காட்சியளித்தது.

இதனால் கீழணையிலிருந்து பொதுப்பணித்துறையினரால் திங்கள்கிழமை காலை முதல் விநாடிக்கு 200 கனஅடி வடவாறு மூலமாக வீராணம் ஏரிக்கு நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. கீழணையின் மொத்தக் கொள்ளளவு 9 அடியாகும். கீழணையில் திங்கள்கிழமை நிலவரப்படி இரண்டரை அடிதான் நீர் உள்ளது. இந்நிலையில் கீழணையிலிருந்து திங்கள்கிழமை வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு 200 கனஅடி திறக்கப்பட்டு, மாலை 100 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

## பயிர் இழப்பீட்டை முறையாக கணக்கெடுத்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என சிதம்பரம் எம்.எல்.ஏ. பாலகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயிர் இழப்பீட்டை முறையாக கணக்கெடுத்து, வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என சிதம்பரம் எம்.எல்.ஏ. பாலகிருஷ்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து கடலூர் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமாரிடம் சனிக்கிழமை அளித்த மனு விவரம்:

காவிரி டெல்டா மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து வருவாய் மற்றும் வேளாண்துறை மூலம் கணக்கெடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த டிசம்பர் மாதம் கடலூர் மாவட்ட வேளாண்துறை மற்றும் கூட்டுறவுத் துறையின் சில அதிகாரிகளின் தவறான நடவடிக்கையால் சிதம்பரம், காட்டுமன்னார்குடி வட்டங்களைச் சேர்ந்த பல்வேறு விவசாயிகள் டிசம்பர் 31-ம் தேதிக்குள் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால், தமிழக அரசு அறிவித்த நிவாரண திட்டத்தின் பலனை விவசாயிகள் பெறமுடியாத நிலை உருவாகி உள்ளது.

தற்போது, பயிர் இழப்பீட்டு மதிப்பை மேற்கொள்ளும்போது வேளாண்துறை அதிகாரிகள் முறையான கணக்கீட்டை எடுக்காமல் குறைத்து கணக்கெடுத்து உள்ளதாக விவசாயிகள் மத்தியில் அச்சமும் கவலையும் ஏற்பட்டுள்ளது.

மொத்தத்தில் 4,500 ஹெக்டேர் நிலம் மட்டுமே 50 சதவீதத்துக்கு மேல் பயிர் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. பயிர் இழப்பீடு ஏற்பட்ட பல கிராமங்கள் முழுமையாக விடுபட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

வேளாண்துறை அதிகாரிகளின் இத்தகைய போக்கின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமிழக அரசின் உரிய நிவாரணம் பெற இயலாத நிலை ஏற்பட்டுவிடும்.

இதனால் சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி வட்டங்களில் பயிர் இழப்பீடு சம்மந்தமாக முறையான கணக்கீடு நடத்த சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பயிர் இழப்பீட்டை குறைத்து கணக்கெடுப்பதை அனுமதிக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

## கறவைப் பசுக்களுக்கு கோமாரி நோய் பாதிப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கறவை பசுக்களுக்குக் கோமாரி நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 89,905 கறவை பசுக்கள், எருமைகள் உள்ளன. இது தவிர காளை மாடுகள் உள்ளிட்ட கால்நடைகளும் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. ஆனால் மேல்பொடவூர், களக்காடு உள்ளிட்ட மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் கால் மற்றும் வாய் கோமாரி நோய் பரவியுள்ளது விவசாயிகளைக் கவலையில் ஆழ்த்தியுள்ளது.

இந்த நோய் பொதுவாக குளிர் மற்றும் பனிக்காலங்களில் ஏற்படுகிறது. மேலும் இந்நோய் பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து வாங்கி வரப்பட்டும் கால்நடைகள் மூலமும், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடாமல் இருத்தல் ஆகியவற்றாலும், இந்நோய் விரைவாகக் காற்றின் மூலம் பரவுகிறது.

இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் ஆகியவற்றால் மற்ற கால்நடைகளுக்கும் நோய் பரவுகிறது. இந்நோய் தாக்கும் கால்நடைகள் தீவனம் உட்கொள்ளாது.

அதிகக்காய்ச்சலால் பாதிக்கப்படுகிறது. நாக்கு, உதடு மற்றும் கால் குளம்புகளுக்கு இடையில் நீர்கொப்புளங்கள் உருவாகி பின், புண் ஏற்பட்டு ஒருவாரத்திற்கு குறையாமல் தீவனம் உட்கொள்வதில்லை.

நோயினால் பாதிக்கப்பட கறவை பசுவின் பாலை இளம் கன்றுகள் குடித்தால் அக்கன்றுகள் இறக்க நேரிடுகிறது. கறவை மாடுகளில் பால்வற்றி, மாடுகளின் நிறம் மாறி, வெயில் காலங்களில் அதிகப்படியான மூச்சுவாங்குதல் போன்ற அறிகுறிகள் தென்படுவதோடு, நோய் தாக்கிய பசுக்களில் சினைப்பிடிப்பு தடைபடுகிறது. இதனால் பால் உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டு கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மருத்துவர்கள் பற்றாக்குறை: காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஒன்றிய அளவில், கிராம அளவில் கால்நடை மருந்தகங்கள், மருத்துவமனைகள் உள்ளன. மொத்தம் 120 மருத்துவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 76 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். இதனால் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி உள்ளிட்ட கால்நடை பராமரிப்புப் பணிகள் பாதிக்கப்படுகின்றன.

## டெல்டா விவசாயிகளைப் பாதுகாக்க கடன் நிவாரண ஆணையம் அமைக்கக் கோரி மனு

டெல்டா விவசாயிகளைப் பாதுகாக்க கடன் நிவாரண ஆணையம் அமைக்கக் கோரிய மனுவுக்கு பதில் அளிக்குமாறு அரசுக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது.

மாநில வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பட்டயதாரிகள் சங்கத்தின் செயலர் வி.பாலகிருஷ்ணன் தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

அவரது மனு விவரம்:

பருவமழை பொய்த்ததால் டெல்டா மாவட்டங்களில் 11.20 லட்சம் ஏக்கர் சம்பா பயிர் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நெல் விவசாயிகள் 11 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். டெல்டா மாவட்டங்களில் விவசாயம்தான் பிரதான தொழிலாக இருக்கிறது. வேலைவாய்ப்புக்கு வேறு தொழிற்சாலைகள் இங்கு கிடையாது. இந்நிலையில், நீலம் புயலின் தாக்கத்தால் விவசாயிகள் ஏற்கெனவே பெரும் இழப்பை எதிர்கொண்டனர். ஆனால், அதற்குரிய நிவாரணத்தை அரசு வழங்கவில்லை.

இதைத் தொடர்ந்து பருவமழை மற்றும் காவிரி நீரை நம்பிய விவசாயிகள், வங்கிகள் மற்றும் தனியாரிடம் கடன் பெற்று விவசாயப் பணிகளைத் தொடர்ந்தனர். ஆனால், கர்நாடக அரசு காவிரி நீரைத் திறந்துவிடாத காரணத்தால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அறுவடைக்குப் பிறகு கடனை அடைத்துவிடலாம் என்ற நம்பிக்கையில் இருந்த விவசாயிகளுக்கு கடுமையான நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

காவிரியில் தண்ணீர் திறந்து விடப்படாததால் கடன் கொடுத்தவர்களும் விவசாயிகளுக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர். இதனால் தங்களது சொத்துகளை விற்பதற்கும், அடமானம் வைக்க வேண்டிய நிலைக்கும் விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். அதற்கு வழியில்லாத சிறு விவசாயிகள் தற்கொலை முடிவுக்குத் தள்ளப்படுகின்றனர். இதுபோன்ற சூழலைச் சமாளிப்பதற்காக கேரள அரசு 2005 இல், கடன் நிவாரண ஆணையத்தை அமைத்தது. அப்போது வறட்சி ஏற்பட்ட நிலையில், கேரள மாநிலத்தின் வயநாடு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளின் தற்கொலையைத் தடுப்பதற்காக அத்தகைய ஆணையம் அமைக்கப்பட்டது. இதேபோன்ற ஆணையத்தை தமிழகத்திலும் ஏற்படுத்த உத்தரவிட வேண்டும்.

மேலும், பயிர் காப்பீட்டுத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதில் தமிழக அரசு தவறி விட்டது. இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனத்தின் புள்ளிவிவரங்களின்படி, பயிர் காப்பீட்டுத்

திட்டத்தில் தமிழகம் பின்தங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து வகையான பயிர்களுக்கும் முழுமையான பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். மேலும், இடைக்கால உத்தரவாக காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளின் கடன் பிரச்னைகளைக் களையும் ஆணையத்தை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்ய தமிழக அரசுக்கும், டெல்டா மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கும் உத்தரவிட வேண்டும் என மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இம்மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி (பொறுப்பு) ராஜேஷ்குமார் அகர்வால், நீதிபதி சித்ரா வெங்கட்ராமன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மனுவுக்கு பதில் அளிக்குமாறு அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டது.

### கண்வலிக்கிழங்கு சாகுபடியாளர்களுக்கு ரூ.11.83 லட்சம் மானியம் வழங்கல்

கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்த 45 விவசாயிகளுக்கு மானியமாக ரூ. 11.83 லட்சத்திற்கான காசோலையை, மாவட்ட ஆட்சியர் ந.வெங்கடாசலம் வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் தேசிய மருத்துவப் பயிர்கள் இயக்ககத்தின் மூலம், 2012- 13ஆம் ஆண்டு கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் விழா ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவில் வேடசந்தூர், தொப்பம்பட்டி வட்டங்களில் சுமார் 50 ஏக்கர் நிலப்பரப்பில் கண்வலிக்கிழங்கு சாகுபடி செய்த 45 விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு தலா ரூ. 68,750 என மொத்தம் ரூ. 11.83 லட்சம் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கி ஆட்சியர் பேசியது:

நாட்டிற்கு அன்னிய செலாவணியை ஈட்டித் தரும் முக்கியப் பயிராக விளங்கும் கண்வலிக்கிழங்கு சாகுபடி, விவசாயிகளுக்கு அதிக மகசூலை அளித்து வருகிறது. கண்வலிக்கிழங்கின் விதை கிலோ சுமார் ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதில் பெருமளவு விதைகள் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

அதிக லாபம் தரும் கண்வலிக்கிழங்கு சாகுபடி முறைகள் குறித்து, தோட்டக்கலைத் துறையினரிடம் கேட்டு விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்து பயன்பெற வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கே. மனோகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பி.ஆர்.கே. ரமேஷ், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் த.சந்திரசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிப்.22-ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது.

மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது குறைபாடுகள் குறித்து மனு அளித்து தீர்வு காணலாம் என்று மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) செ.முத்தையா தெரிவித்தார்.

## பெரியாறு அணை பகுதியில் கனமழை

பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு கன மழை பெய்தது.

தேக்கடியில் 14.4 மி.மீ., பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் 14.3 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. உத்தமபாளையத்தில் 3 மி.மீ. மழை பெய்துள்ளது. பெரியாறு அணை

நீர் மட்டம் திங்கள்கிழமை 112.7 அடியாக இருந்தது. அணைக்கு தண்ணீர் வரத்து விநாடிக்கு 290 கன அடி. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 105 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## இடைத்தரகர்களின் எடையில் மோசடி: மிளகாய் விவசாயிகள் கண்ணீர்

திருவாடானை தாலுகா ஆர்எஸ் மங்கலம் பகுதி மிளகாய் கமிஷன் மண்டியில் தரகர்கள் சிண்டிகேட் அமைத்து சாக்கு எடை கழிப்பதாகவும், எடையில் மோசடி நடப்பதாகவும் மிளகாய் விவசாயிகள் வேதனையுடன் தெரிவித்தனர்.

ஆர்எஸ் மங்கலம் பகுதிகளான செங்கு, வண்டல், வரவணி, சீனாங்குடி, மங்கலம், சனவேலி உள்பட நூறுக்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 2500க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய் விவசாயம் செய்யப்படுகிறது.

போதிய மழை இல்லாமல் நெல் விவசாயம் பாதித்த நிலையில் குறைந்த தண்ணீரில் விளையைக்கூடிய மிளகாய் விவசாயம் கை கொடுக்கும் நேரத்தில் இரண்டு நாள்களுக்கு முன் பெய்த மழையின் காரணமாக பழம் சோடையாகும் எனக் கவலையுடன் இருந்த நிலையில்,

சனிக்கிழமை வாரச்சந்தையில் மிளகாய் வியாபாரிகள் சிண்டிகேட் அமைத்து குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வரை குறைத்து வாங்கினர்.

கடந்த வாரம் ரூ.9 ஆயிரத்து 500க்கு வாங்கிய வியாபாரிகள் ரூ.7 ஆயிரத்து 500க்கு வாங்கினர். அதிக விலைக்கு யாரையும் அனுமதிப்பதில்லை. இதனால் மிளகாய் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது.

இது குறித்து செங்குடி விவசாயி கார்த்தி கூறுகையில், சிவகங்கை மாவட்டத்தில் தோட்டகலைத் துறையினர் உலர்கலன் அமைத்ததுபோல் இங்கும் அமைத்திருந்தால் மிளகாய் வத்தல் நனைந்திருக்காது. எனவே மாவட்ட நிர்வாகம் தக்க நடவடிக்கை எடுத்து உலர் கலன் அமைத்துக் கொடுக்க வேண்டும். மேலும் சந்தையில் 200 கிராம் எடையுள்ள பாலிதீன் சாக்கிற்கு 1 கிலோ வரை கழிப்பதாலும் தற்போது கிலோ ரூ.85 வரை விற்பனை செய்யப்படுகிறது. 10 மூட்டை கொண்டு வந்திருந்தால் 10 கிலோ வரை கழிப்பதால் சாதாரண விவசாயியிடம் ரூ.850 வரை எடையில் மோசடி செய்யப்படுகிறது. மேலும் மின்னனு தராசு பயன்படுத்துவதில்லை. எனவே மாவட்ட நிர்வாகம் தக்க நடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## ஈரோட்டில் திடீர் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி

ஈரோடு மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவில் பெய்த திடீர் மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பருவ மழை பொய்த்துவிட்டதால் ஈரோடு மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. அணைகள், குளங்கள் மற்றும் நீர்நிலைகள் வறண்டு வருகின்றன. பல்வேறு உள்ளாட்சிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்நிலையில், மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென மழை பெய்தது. ஈரோடு, பவானி, கோபி, அரச்சலூர் உள்ளிட்ட இடங்களில் நல்ல மழை பெய்தது.

சுமார் ஒன்றரை மணி நேரம் பெய்த மழையால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கவுந்தப்பாடி, அரச்சலூர், சத்தியமங்கலம், சிவகிரி உள்ளிட்ட இடங்களில் இடி, மின்னலுடன் மழை பெய்தது. இருப்பினும் மலைப்பகுதிகளில் அதிக அளவில் மழை பெய்யவில்லை.

திங்கள்கிழமை நிலவரப்படி மழை அளவு விவரம்: பவானி-72 மி.மீ., ஈரோடு-54 மி.மீ., கோபி-23 மி.மீ., அரச்சலூர்-14 மி.மீ., ஓலப்பாளையம்-15 மி.மீ, கவுந்தப்பாடி-10 மி.மீ., கொடிவேரி-10 மி.மீ., குண்டேரிப்பள்ளம்-4 மி.மீ., எலந்தகுட்டைமேடு-2 மி.மீ.

## பவானிசாகர் நீர்மட்டம் 32.65 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 32.65 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. விநாடிக்கு 150 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 88 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.64 டி.எம்.சி.

## மஞ்சூர் கூட்டுறவு தேயிலை ஆலை சிறப்பு பேரவைக் கூட்டம்

மஞ்சூர் கூட்டுறவு தேயிலை ஆலையின் சிறப்பு பேரவைக் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு கே.கே.லிங்கா கவுடர் தலைமை வகித்தார். நிர்வாகிகள் டி.பி.ராமன், வாசுதேவன், கே.கே.போஜன், எம்.போஜன், பி.ராதாகிருஷ்ணன், எம்.பி.ராஜூ ஆகியோர் முன்னிலை வகித்தனர். தனி அலுவலர் அருணாச்சலம் வரவேற்றார்.

நிர்வாக குழு அமைக்கப்பட்டப் பிறகு, புதிய உலர் இயந்திரம் வாங்குவது குறித்து முடிவு செய்யவேண்டும்; பசுந்தேயிலை கொள்முதல் செய்வதில் தற்போது உள்ள நடைமுறைகளையே பின்பற்றபட வேண்டும்; நேரடியாக ஆலைக்கு பசுந்தேயிலை கொண்டுவரும் அங்கத்தினர்களிடம் பசுந்தேயிலையை கொள்முதல் செய்ய வேண்டும்; ஆலையில் தற்போது உள்ள லாபத்தொகையான ரூ.24 லட்சத்தில் 75 சதவீத தொகையை அங்கத்தினர்களுக்கு கூடுதல் விலையாக வழங்க வேண்டும் என கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கணக்காளர் மனோகரன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் மஞ்சூர், கீழ்குந்தா, மேல்குந்தா, கரியமலை, கெச்சிகட்டி, தூனேரி, கண்டிபிக்கை, தொட்டக்கம்பை, காந்திபுரம், கூர்மியாபுரம், குந்தா, பாக்கோரை, தாய்சோலை, மட்டக்கண்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த கூட்டுறவு ஆலை அங்கத்தினர்கள் கலந்துகொண்டனர்.

## வேலூரில் பலத்த மழை

வேலூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் திங்கள்கிழமை அதிகாலை பலத்த மழை பெய்தது. இதனால் தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

நகரின் தாழ்வானப் பகுதிகளில் கழிவுநீருடன் மழை நீரும் சேர்ந்து தெருக்களில் ஓடியதால் பொதுமக்கள் சிரமத்துக்கு ஆளாயினர்.

காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வேலூர் மாநகரில் கடந்த இரு தினங்களாக இரவு நேரத்தில் மழை பெய்து வருகிறது. திங்கள்கிழமை அதிகாலை பெய்யத் தொடங்கிய மழை சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது.

மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு:

வேலூர்-20.4 மி.மீ, காட்பாடி-71, மேல்பாடி 38.4, திருப்பத்தூர் 24.5, அரக்கோணம் 23, சோளிங்கர் 19, வாலாஜாபேட்டை 4.0, காவேரிப்பாக்கம், வாணியம்பாடி தலா 3.0.

## அறுவடை தேங்காய்களை உடனே விற்று லாபம் அடையலாம்

திருவண்ணாமலை மாவட்ட விவசாயிகள், தாங்கள் அறுவடை செய்த தேங்காய்களை உடனே விற்று லாபம் அடையலாம் என்று வேளாண் வணிகத் துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கொப்பரைத் தேங்காயின் விலை, குறைந்தபட்ச ஆதரவு விலை கிலோவுக்கு ரூ.51-ஐ விடக் குறைவாக உள்ளது. தேங்காயின் விலை அதிகரிக்குமா அல்லது சேமித்து வைக்க வேண்டுமா என்ற குழப்பத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் உள்ளனர்.

இந்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மை புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், பொள்ளாச்சி சந்தையில் கடந்த 10 ஆண்டுகளாக நிலவிய தேங்காய் விலையை ஆராய்ந்துள்ளது.

அதன்படி, 2013 பிப்ரவரி இறுதி வரை தேங்காய் ஒன்றின் பண்ணை விலை ரூ.4.50 முதல் ரூ.5.50 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.  எனவே, விலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளதால், விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த தேங்காய்களை உடனே விற்று லாபம் அடையலாம் என்று திருவண்ணாமலை மாவட்ட வேளாண் வணிக துணை இயக்குநர் இரா.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## விடுபடாமல் நிவாரணம் வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்

அரசு அறிவித்துள்ள நிவாரணத் தொகை தங்களது பகுதிக்கும் விடுபடாமல் வழங்கக் கோரி குணமங்கலம் விவசாயிகள் திங்கள்கிழமை ஆட்சியரிடம் மனு அளித்தனர்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில், ஆட்சியர் கா. பாஸ்கரனிடம் சித்திரக்குடி அருகேயுள்ள குணமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த செங்குட்டுவன் தலைமையில் சுமார் 20 விவசாயிகள் காய்ந்த பயிர்களுடன் வந்து அளித்த மனு:

குணமங்கலம் கிராமத்தில் ஏறத்தாழ 100 ஹெக்டேரில் சம்பா சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. ஆனால், காவிரியில் தண்ணீர் வராததாலும், மழை இல்லாததாலும் பயிர்கள் காய்ந்து விட்டன.

இவற்றை அரசு அலுவலர்கள் நேரில் வந்து ஆய்வு செய்ய வேண்டும். மேலும், அரசு அறிவித்துள்ள பயிர் நிவாரணத் தொகையை குணமங்கலம் கிராம விவசாயிகளுக்கும் விடுபடாமல் வழங்க வேண்டும்.

பட்டா வழங்கக் கோரி: கும்பகோணம் அருகே பாபுராஜபுரம் பகுதி நியூ பர்மா நகரைச் சேர்ந்த சுமார் 50 பேர் அளித்த மனு:

கும்பகோணம் நாகேஸ்வரன் மேல வீதி, உச்சிபிள்ளையார் கோவில், கொட்டையூர் உள்ளிட்ட பகுதிகளில் வசித்து வந்தோம். மகாமக விழாவை முன்னிட்டு 2003 ஆம் ஆண்டில் சாலையை அகலப்படுத்துவதற்காக அரசு அலுவலர்கள் எங்களிடம் இடத்தைக் காலி செய்யுமாறு கூறினர். அதற்கு மாற்றாக பாபுராஜபுரம் பகுதியில் உள்ள நியூ பர்மா நகரில் இடம் கொடுத்தனர்.

இந்த இடத்துக்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை. மேலும், கழிப்பிட வசதி, தெரு விளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதியும் நிறைவேற்றப்படவில்லை. இதனால், மிகுந்த சிரமத்துக்கு ஆளாகியுள்ளோம். முதலில் எங்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 30.92 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 30.92 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 4,461 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

கல்லணையிலிருந்து கொள்ளிடத்தில் வினாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாயில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## பிப். 23 முதல் விவசாயிகளுக்கு ரூ. 18.39 கோடி நிவாரணம்

தஞ்சாவூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பிப். 23-ம் தேதி முதல் ரூ. 18.39 கோடி நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் திங்கள்கிழமை நடைபெற்ற வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்பான முன்னேற்பாடுகள் குறித்த அனைத்துத் துறை அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

மாவட்டத்தில் 50 சதத்துக்கும் அதிகமாக பயிர் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 15,000 வழங்க தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. மாவட்டத்தில் 12,249 ஏக்கரில் நெல் பயிர்கள் 50 சதத்துக்கும் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலங்களைச் சார்ந்த விவசாயிகளுக்கு ரூ. 18 கோடியே 39 லட்சத்து 735 மதிப்பில் நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளன.

தஞ்சாவூர், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும், தேசியமயமாக்கப்பட்ட வணிக வங்கிகள் மூலமாகவும் பயிர் பாதிப்படைந்துள்ள விவசாயிகளுக்கு நேரடியாக அவர்களுடைய வங்கிக் கணக்குக்கு இ.சி.எஸ். மூலம் நிவாரண உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

எனவே, வட்டாட்சியர்கள் 50 சதத்துக்கும் அதிகமாக பயிர் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் பெயர், முகவரி, வங்கிக் கணக்கு எண், சிட்டா அடங்கல், பயிர் காப்பீடு ஆகிய விவரங்களைத் தயார் செய்யும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். நிவாரணத் தொகை பெறவுள்ள விவசாயிகளிடம் காப்பீட்டுத் தொகையை அரசுக்கு செலுத்துகிற உறுதி மொழிப் படிவங்களைப் பெற வேண்டும். வருவாய் கோட்டாட்சியர்கள் இந்தப் பணிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

பிப். 23-ம் தேதி முதல் 50 சதம் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு வங்கிகள் மூலம் நிவாரண உதவித் தொகைகள் வழங்கப்படவுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் இதற்கான முன்னேற்பாடு பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் ஆண்டுக்கு ஒரு குடும்பத்துக்கு 100 நாள்கள் வேலை என்பதை 150 நாள்களாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. எனவே, கிராமங்களில் 100 நாள்கள் வேலை முடித்த சுமார் 30,000 குடும்பங்களுக்கு விடுபடாமல் 150 நாள்கள் வேலை வழங்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வறட்சியைக் கருத்தில் கொண்டு கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதற்காக மாவட்டத்தில் முதல் கட்டமாக 786 பண்ணைக் குட்டைகளை அமைக்கத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இந்தப் பணிகளைத் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொண்டு விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் பாஸ்கரன்.

மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் க. வரதராஜன், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் அந்தோணிசாமி ஜான் பீட்டர், வேளாண் இணை இயக்குநர் எம்.இசட். முகமது யாஹியா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பிப். 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பிப். 28-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்திருவாரூர், பிப் 18: திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 28-ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், தோட்டக்கலைத் துறை விவசாயிகள் உள்ளிட்டோர் பங்கேற்று தங்கள் குறைகளைத் தெரிவித்து பயன் பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலத்தடி நீர் மேலாண்மை குறித்து 2 நாள் பயிற்சி தொடக்கம்

காரைக்காலில் நிலத்தடி நீர் மேலாண்மை குறித்த 2 நாள் பயிற்சி திங்கள்கிழமை தொடங்கியது.

மத்திய நிலத்தடி நீர் வாரியம், தென்கிழக்கு கடலோர மண்டலம் சென்னை மற்றும் ராஜீவ் காந்தி தேசிய நிலத்தடி நீர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் கிராம அளவிலான நிலத்தடி நீர் தாங்கிகளின் மேலாண்மைத் திட்டம் என்ற 2 நாள் பயிற்சியை காரைக்காலில் திங்கள்கிழமை தொடங்கியது.

இப்பயிற்சியில் விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள், பல்வேறு துறையை சார்ந்தவர் என சுமார் 200 பேர் கலந்துகொண்டனர். நிலத்தடி நீர் அடுக்குகளை பற்றிய தகவல்கள் பயனாளிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

நீரடுக்குகளை பாதுகாப்பதன் அவசியம் குறித்தும், அதற்கான உத்திகள் குறித்தும் பயிற்சியாளர்கள் விளக்கிக் கூறினர்.

மத்திய நிலத்தடி நீர் வாரியம், தென்கிழக்கு மண்டல இயக்குநர் இ. சம்பத்குமார் பயிற்சியின் அவசியம் குறித்து பேசினார். காரைக்கால்  கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன், பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் பி. சுவாமிநாதன் உள்ளிட்டோர் வாழ்த்தி பேசினர். நிறைவில், டி. ராஜேந்திரன் நன்றி கூறினார்.

2 நாள் பயிற்சியில் மத்திய நிலத்தடி நீர் வாரிய துறை அதிகாரிகள், விஞ்ஞானிகள் பங்கேற்கின்றனர்.

நிறைவு நாளான செவ்வாய்க்கிழமை மாணவர்களிடையே நீர் சேமித்தல் மற்றும் பாதுகாத்தல் குறித்த பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, நாடகப் போட்டி நடைபெறவுள்ளது.

## குளங்களுக்கு தண்ணீர் திறந்துவிட விவசாயிகள் சங்கம் கோரிக்கை

உடன்குடி, திருச்செந்தூர் ஒன்றியங்களில் நிலத்தடி நீர் உப்பாவதைத் தடுக்க இப்பகுதி குளங்களுக்கு தண்ணீர் திறந்து விடவேண்டும் என விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து தூத்துக்குடி தெற்கு மாவட்ட விவசாயிகள் பொதுமக்கள் நலச்சங்கத்தின் தலைவர் சந்திரசேகரன், தமிழக முதல்வர் மற்றும் திருநெல்வேலி பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஆகியோருக்கு அனுப்பியுள்ள மனு விவரம்:

உடன்குடி,திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்கு ஸ்ரீவைகுண்டம் அணை தென்காலில் இருந்து தண்ணீர் ஆவுடையார்குளம், எல்லப்பநாயக்கன்குளங்களுக்கு வருகிறது. இத்தண்ணீரை நம்பி இக்குளத்தின் கரையோரம் 64 ஆழ்துளை கிணறுகள் உள்ளன.

இக்குளங்களுக்கு தண்ணீர் வரவில்லையென்றால் நிலத்தடி நீர் உப்பாகி மக்களுக்கு குடிநீர் பஞ்சம் ஏற்படும். எனவே,

மணிமுத்தாறு அணையில் 82 அடி தண்ணீர் உள்ளதால் இக்குளங்களுக்கு தண்ணீர் திறந்துவிட்டால் நிலத்தடிநீர் உப்பாகாமல் தடுக்கலாம்.

எனவே தமிழக அரசு இக்குளங்களுக்கு தண்ணீர் திறந்துவிட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## மரபணு மாற்றப்பட்ட விதைகளை பயிர் செய்ய அனுமதிக்க வேண்டும்: சரத் பவார்

மரபணு மாற்றப்பட்ட விதைகளை சோதனை முறையில் சாகுபடி செய்ய விஞ்ஞானிகளை அனுமதிக்க வேண்டும் என மத்திய வேளாண்துறை அமைச்சர் சரத் பவார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இந்திய வேளாண் ஆய்வுக் கழகத்தின் (ஐசிஏஆர்) 84 ஆவது பொதுக்குழுவில் அவர் மேலும் பேசியதாவது:

சாகுபடி நிலம் உள்பட இயற்கை வளங்கள் வரையறுக்கப்பட்ட அளவே உள்ளன. 120 கோடி மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு அளிக்க, உற்பத்தித் திறனை அதிகரிக்க நமக்கு வேறு வாய்ப்புகள் இல்லை.விஞ்ஞானிகளின் உறுதியை நாம் புறக்கணிக்கக் கூடாது; மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை பரிசோதனை முயற்சியாக சாகுபடி செய்யும் விஞ்ஞானிகளின் உரிமையை நாம் தடை செய்யக் கூடாது.அதற்கான ஆய்வுகளைத் தடை செய்யக் கூடாது. அவற்றுக்கு தீங்கு விளைவிக்கக் கூடாது. வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கல்வியில் தனியார்-பொதுத்துறை பங்களிப்பு அவசியம். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், நானோ தொழில்நுட்பம், பண்ணை இயந்திரமயமாக்கல், விதை நேர்த்தி உள்ளிட்ட சிக்கலான துறைகளில் கவனம் செலுத்த வேண்டும்.ஏழை விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்துக்கு மாறுவதை ஊக்குவித்து, உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அத்துடன், மட்டுமீறிய உழைப்பு விரயமாவதையும் தடுக்க வேண்டும் எனக் கூறினார்.

## கரும்பு கொள்முதல் விலை உயர்வு எப்போது? கருணாநிதி

கரும்பு கொள்முதல் விலை எப்போது உயர்த்தப்படும் என்று தமிழக அரசுக்கு கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

கரும்பு கொள்முதல் விலை எப்போது உயர்த்தப்படும் என தமிழக விவசாயிகள் காத்திருக்கின்றனர். ஆளுநர் உரை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து பேசும்போது, கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தும் அறிவிப்பை முதல்வர் வெளியிடுவார் என எதிர்பார்த்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே ஏற்பட்டது.

தமிழகத்தில் மூன்றரை லட்சம் கரும்பு விவசாயிகள் உள்ளனர். 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 3 பொதுத்துறை ஆலைகளும், 28 தனியார் சர்க்கரை ஆலைகளும் உள்ளன. தற்போது கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ. 2,350 ஆக உள்ளது. அதில் வாடகை ரூ. 100 போக ரூ. 2,250 மட்டுமே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது.

2011 அதிமுக தேர்தல் அறிக்கையில், கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ. 2,500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்ததும் ரூ. 2,100 மட்டுமே அறிவித்தார்கள். இந்த ஆண்டாவது ரூ. 2,500 கிடைக்கும் என எதிர்பார்த்தார்கள். ஆனால், ரூ. 2,350 என்ற அளவுக்குதான் உயர்த்தியிருக்கிறார்கள். கரும்புக்கு டன்னுக்கு ரூ. 2,500 வழங்க வேண்டும் என்று 7-11-2009-ல் ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டார். ஆனால், இதுவரை அந்த தொகை வழங்கப்படவில்லை. விவசாயிகளின் கோரிக்கை ஏற்கப்பட்டு கரும்பு கொள்முதல் விலை எப்போது உயர்த்தப்படும் என்று கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

## மேட்டூர் அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு



மேட்டூர் அணைக்கு நீர் வரத்து திங்கள்கிழமை மேலும் அதிகரித்தது.

உச்ச நீதிமன்ற உத்தரவை அடுத்து, தமிழக காவிரி டெல்டா மாவட்டங்களில் அதிகாரிகள் குழு அண்மையில் ஆய்வு செய்தது. இந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்று தமிழகத்துக்கு 2.44 டி.எம்.சி. தண்ணீரை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. முன்னதாக, இதே அளவு தண்ணீர் மேட்டூரில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 9-ஆம் தேதி கர்நாடக அரசு வினாடிக்கு சுமார் 2 ஆயிரம் கன அடி வீதம் காவிரியில் தண்ணீர் திறந்துவிட்டது. ஆனால், இந்தத் தண்ணீர் தாமதமாக கடந்த 15-ஆம் தேதிதான் மேட்டூர் அணைக்கு வந்து சேர்ந்தது. கடந்த இரண்டு நாள்களாக நீரின் அளவு படிப்படியாக அதிகரித்தது. இதைத் தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 1,763 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது திங்கள்கிழமை காலை 8 மணியளவில் வினாடிக்கு 3,418 கன அடியாக உயர்ந்தது. அணையின் நீர்மட்டமும் 30.65 அடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் கடந்த 3 நாள்களில் ஒரு அடி அதிகரித்துள்ளது. அணையில் இருந்து சேலம், நாமக்கல், ஈரோடு ஆகிய மாவட்டங்களின் குடிநீர்த் தேவைக்காக வினாடிக்கு சுமார் 600 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

இதற்கிடையே, கர்நாடகத்தின் கே.ஆர்.எஸ். அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவை வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக உயர்த்தி அந்த மாநில அரசு உத்தரவிட்டது.

இதனால், மேட்டூருக்கு வரும் நீரின் அளவு மேலும் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### இன்றும் மழை பெய்யும்



அரபிக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பதால் தமிழகத்தில் செவ்வாய்க்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

லட்சத்தீவுகளுக்கு அருகில் தென் கிழக்கு அரபிக் கடலில் சில நாள்களுக்கு முன்பு குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இதன் காரணமாக தமிழகம் முழுவதும் பல இடங்களில் மழை பெய்தது. இந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை அதே இடத்தில் தொடர்ந்து நிலை கொண்டுள்ளதால் தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னையைப் பொருத்தவரையில் வானம் பொதுவாக மேக மூட்டத்துடன் காணப்படும். மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் பதிவான மழை (திங்கள்கிழமை காலை நிலவரம் - மி.மீ.): திருவாலங்காடு - 120, பூண்டி - 60, திருவள்ளூர், ஸ்ரீபெரும்புதூர் - 50, எண்ணூர், பொன்னேரி - 40, அரக்கோணம், திருத்தணி, சோளிங்கர் - 30, பூந்தமல்லி, வாணியம்பாடி, குடியாத்தம், ஆர்.கே. பேட்டை, செங்குன்றம் - 20, மேல் ஆலத்தூர், சோழவரம், தாம்பரம், ஆம்பூர், கிருஷ்ணகிரி, பள்ளிப்பட்டு, வேலூர், சென்னை விமான நிலையம் - 10.

கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலும் பல இடங்களில் மழை பெய்துள்ளது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

19.02.2013 A.M

## நெல்லிக் கனி விளைச்சல் தென்காசி பகுதியில் அமோகம்

தென்காசி:தென்காசி பகுதியில் கடும் வறட்சி நிலவிய போதும் நெல்லிக்காய் அமோக விளைச்சல் ஏற்பட்டுள்ளதால் கூவி, கூவி விற்கும் நிலை காணப்படுகிறது.

நல்வாழ்வுக்கு ஊன்று கோலாக இருப்பவை கனிகள். மா, பலா, வாழை என்று முக்கனிகளைப் பற்றி அறிவோம். பல்லாண்டுகளாக மக்களை வாழ வைத்து வருவது மட்டுமல்லாமல் வரலாற்று சிறப்பு வாய்ந்த நல்வாழ்வுக் கனி நெல்லிக் காய். எல்லா வயதினருக்கும் அனைத்து சீசன்களில் எந்த பக்குவத்திலும் சாப்பிடக்கூடியது நெல்லிக் கனி ஒன்று தான்.

சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் அதியமான் எனும் அரசன் அவ்வை தமிழுக்கு அர்ப்பணித்த உயர்ந்த கனி நெல்லிக் கனி. குளிர், கோடை காலத்திற்கும் ஏற்ற கனி என்பதை இயற்கை குறிப்பால் உணர்த்துவது போல, காய்த்து கனியாகும் காலம் நவம்பர் முதல் மே வரையிலான இரு வகை காலமாகும்.

நெல்லிக்கனியின் மருத்துவ குணம் :

கறுப்பாக தலை முடியை வளர்த்து காப்பதிலிருந்து மூளை, கண், மூக்கு, தோல், பற்கள், ஈறுகள், தொண்டை மூச்சுக் குழல், நுரையீரல், இதயம், இதய நாளங்கள், கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல், பெருங்குடல், கருப்பை, சிறுநீரகம், மூட்டுகள், பாதங்கள் வரை அனைத்து உறுப்புகளையும் சீராக செயல்படத்தேவையான அனைத்து சத்துக்களையும் கொண்டுள்ளது நெல்லிக் கனி.

நெல்லிக் கனியில் தெய்வீக அம்சம் :- இப்படி பல்வேறு மருத்துவ குணங்களையும் கொண்ட நெல்லிக் கனியை ஊறவைத்த தண்ணீரில் குளித்தால் கங்கையில் நீராடிய பலன்களையும், காசியில் வாசம் செய்த புண்ணியத்தையும் அடையலாம். நெல்லி இலைகளை கொண்டு அர்ச்சனை செய்து, நெல்லிக்கனியை விஷ்ணுவிற்கு படைத்தால் வீட்டில் ஏவல், பில்லி சூனியம்

பாதிப்பு ஏற்படாது என்றும் நெல்லி மரத்தில் மகாலட்சுமி வாசம் செய்வதாகவும் புராணம் கூறுகிறது.

இப்படி மருத்துவ குணமும், தெய்வீக அம்சத்துடன் கூடிய நெல்லிமரம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தென்காசி, குற்றாலம், ஐந்தருவி, செங்கோட்டை, வல்லம், கண்ணுப்புளிப்ட்டு, மோட்டை, புளியரை, கற்குடி, தெற்குமேடு, எஸ்.வளைவு பகுதிகளில் அதிகம் காணப்படுகிறது.

தற்போது கடும் வறட்சி நிலவி வந்தபோதும் நெல்லிக்கனி விளைச்சல் அமோகமாக உள்ளதால் ஒன்றரை கிலோ 10 ரூபாய்க்கு கூவி கூவி விற்கும் நிலை காணப்படுகிறது.

### வேளாண்துறை ஆலோசனையால் அதிக மகசூல்: இணை இயக்குனர் தகவல்

தூத்துக்குடி: தூத்துக்குடி அருகே குறைவான தண்ணீர், குறைவான உரம் போன்றவற்றை பயன்படுத்தியதால் நெல் பயிர்கள் நல்ல விளைச்சல் கண்டுள்ளது. என்று வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு போதிய மழை இல்லாமல் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஆற்றுப்பாசன பகுதியில் சில இடங்களில் நெல் பயிர்கள் நல்ல நிலைக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது.இதற்கிடையில் அரசு மற்றும் வேளாண்மைத்துறையின் அறிவுரைப்படி பயிரிடப்பட்ட விவசாயிகளுக்கு நெல் பயிர் நல்ல
மகசூலை கொடுக்கும் வகையில் இருப்பதாக வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது;தூத்துக்குடி மாவட்டத்தில் கடம்பா பாசனத்தில் துறையூர், குருக்காட்டூர், அங்கமங்கலம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் வேளாண்மைத்துறையின் அறிவுரைப்படி காய்ச்சலும், பாய்ச்சலுமாக நெல் பயிர்களுக்கு தண்ணீர் விட்டனர்.

ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சிமருந்து நிர்வாகம், ஒருங்கிணைந்த உர நிர்வாகம் ஆகியவற்றில் குறைவான உரம், குறைவான தண்ணீர் பாய்ச்சினர். பூச்சி மருந்துகளும் குறைவாக அடித்தனர்.யூரியா உரம் மிக குறைவாக பயன்படுத்தினர். மொத்தம் 2 ஆயிரத்து 400 ஏக்கர் பரப்பில் பயிர் செய்த நெல் பயிர்கள் தற்போது கதிர் வெளியே வர ஆரம்பித்து விட்டன. இன்னும் அதிகப்பட்சமாக ஒரு மாதத்தில் அறுவடை துவ ங்கிவிடும். தற்போது நெல் கதிர்களை பார்க்கும் போது மிக அதிகமாக விவசாயிகள் எதிர்பார்ப்பை விட மகசூல் அதிகமாக இருக்கும்.

பயிர்களை நாங்கள் ஆய்வு செய்த போது அதனை கண்டறிந்தோம்.

அறுவடை முடிந்தவுடன் விவசாயிகள் நெல்லுக்கு தற்போது நல்ல விலை இருப்பதால் அதனை விற்பனை செய்து கூடுதல் லாபம் பெறும் வாய்ப்பும் இதன் மூலம் கிடைத்திருக்கிறது. இதனால் விவசாயிகள் வேளா ண்மைத்துறை அறிவுரையின் பேரில் பயிர் சாகுபடி செய்தால் நல்ல லாபம் ஈட்டலாம். மகசூலும் அதிகமாக இருப்பதால் குறைவான செலவில் நிறைவான பணப்பலன் விவசாயிகளுக்கு கிடைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இதனால் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் வேளாண்மைத்துறையின் புதிய முறைப்படி பயிர்கள் செய்து லாபம் பெற வேண்டும். இந்த பகுதியில் அறுவடை முடிந்தவுடன் விவசாயிகள் உடனடியாக உளுந்து பயிர் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரி கலெக்டர் ஆபிஸ் முன்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி: மழை பொய்த்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க கோரி கலெக்டர் அலுவலகம் முன்பு விவசாய சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் திரளாக விவசாயிகள் பங்கேற்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தில் பருவமழை பொய்த்து விட்டதால் பயறு வகைகள் மற்றும் மக்காச்சோளம் 100 சதவீதமும் மற்ற பயிர்கள் 60 சதவீதத்திற்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளது. நெல் பயிரிட்டு முற்றிலும் கருகிப்போன பயிர்களுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும்.

உளுந்து, பாசி பயறு வகைகள், மக்காச்சோளம், கம்பு உள்ளிட்ட பயிர்களுக்கு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும். மழை மற்றும் தண்ணீர் இல்லாமல் பயிர் செய்யாமல் போன விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். விவசாயத்தை மட்டும் நம்பி வாழும் விவசாய கூலித் தொழிலாளர்கள் குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். தண்ணீர் இல்லாமல் கருகிப்போகும் வாழை உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்களுக்கு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும். பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும். தற்கொலை செய்த விவசாயிகளின் குடும்பத்திற்கு 10 லட்சம் ரூபாய் நிவாரணம் மற்றும் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட செயலாளர் பெருமாள் தலைமை வகித்தார்.

மாநில பொதுச் செயலாளர் சண்முகம் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார். விவசாயிகள் சங்கம் மாவட்ட நிர்வாகிகள் ராகவன், கணபதி, சீனிவாசன், சுப்பையா, ராமசுப்பு, மாரியப்பன், வேல்சாமி, ராமலிங்கம், மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் அர்ச்சுனன் மற்றும் பலர் பேசினர். மாவட்டம் முழுவதும் இருந்து திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

### அனைவருக்கும் நிவாரணம் வழங்ககாய்ந்த பயிருடன் விவசாயிகள் மனு

தஞ்சாவூர்: "வறட்சி பாதித்த டெல்டா பகுதியில் வழங்கப்படும் ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் அரசு நிவாரணத்தை, விடுபடாமல் அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்' என வலியுறுத்தி, கலெக்டரிடம் மனு கொடுக்க, காய்ந்த பயிர்களுடன் திடீரென வந்த விவசாயிகளால் பரபரப்பு ஏற்பட்டது.தஞ்சை மாவட்டம், சித்திரக்குடி அருகேயுள்ள குணமங்கலம் பகுதியில், 100 ஹெக்டேரில் சம்பா நெற்பயிரை விவசாயிகள் பயிரிட்டு இருந்தனர். இப்பகுதியில் காவிரி நீர், மழைநீரின்றி பயிர்கள் முழுவதும் காய்ந்து, கருகி வருகின்றன. இதில் ஒரு சில ஹெக்டேர் நிலப்பரப்பில் மட்டும், ஃபோர்வெல் பம்ப் மற்றும் பம்ப்செட் மோட்டார்கள் மூலம், தண்ணீர் இறைத்து, நெற்பயிர்களை உயிர் பிடிக்க செய்யும் இறுதிக்கட்ட முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.இந்நிலையில், தமிழக அரசு சார்பில் வறட்சி பாதித்த டெல்டா விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத்தில், குணமங்கலம் பகுதி விவசாய நிலங்கள் விடுபட்டு விட்டது.

அதனால் அப்பகுதி விவசாயிகளுக்கு அரசின் உரிய நிவாரணத்தொகை கிடைக்காது என, விவசாயிகள் இடையே வேகமாக தகவல் பரவியது.அதிர்ச்சியடைந்த விவசாயிகள், 20க்கும் மேற்பட்டோர், குணமங்கலம் விவசாயி செங்குட்டுவன் தலைமையில், நேற்று மதியம், ஒரு மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடந்த குறைதீர் கூட்டத்துக்கு திடீரென வந்தனர். அப்போது, கையில் காய்ந்த நெற்பயிர்களை ஏந்தியபடி வந்ததால், அரசு அதிகாரிகளிடையே இடையே பரபரப்பு ஏற்பட்டது.அப்போது கலெக்டர் பாஸ்கரனிடம் குணமங்கலம் விவசாயிகள் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:டெல்டா மாவட்டங்களில் காவிரிநீர், மழை நீர் அறவே இல்லாமல், நடப்பாண்டு குறுவை, சம்பா பயிர்கள் பயிரிட முடியாமல், நஷ்டத்துக்கு ஆளாகியுள்ளோம். இந்நிலையில் ஏக்கருக்கு, 15 ஆயிரம் ரூபாய் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என, தமிழக முதல்வர் அறிவித்தார். இந்த நிவாரணம் நஷ்டத்தை சந்தித்துள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.ஆனால், ஒரு சில பகுதிகள் விடுபட்டு, நிவாரணம் வழங்கப்பட மாட்டாது என, கூறுகின்றனர். இந்த குறைபாட்டை தவிர்க்க, தஞ்சை கலெக்டர்

நேரில் வறட்சி பாதித்த வயல்களை பார்வையிட்டு, தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத்தொகை கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### மருந்துகளால் திராட்சையில் விஷம் தோட்டக்கலைத்துறை வேண்டுகோள்

தேனி: மருந்துகளால் திராட்சையில் விஷத்தன்மை கலப்பதால், விவசாயிகள் வீரியம் மிகுந்த மருந்துகளை தெளிப்பதை நிறுத்த வேண்டும், என தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ஸ்ரீராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.அவர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில்,திராட்சைகளை பறவைகள் சாப்பிடுவதை தடுப்பதற்காக சில விவசாயிகள் வீரியம் மிகுந்த மருந்துகளை தெளிக்கின்றனர். இந்த மருந்துகளின் வாசனையை அறிந்த பறவைகள் அருகில் நெருங்குவதே இல்லை. இந்த மருந்துகள் திராட்சையில் படியும் போது, பழத்தில் விஷத்தன்மை கலந்து அதனை சாப்பிடுபவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தி விடும். குழந்தைகள் சாப்பிட்டால், நிச்சயம் உடல் உபாதைகள் ஏற்படும். பல்வேறு நோய்களையும் இந்த மருந்துகள் மனிதர்களுக்கு உருவாக்கி விடும். விவசாயிகள் இந்த மருந்து தெளிப்பதை நிறுத்த வேண்டும். மருந்துகளை தெளிக்காமல் பறவைகளிடம் இருந்து திராட்சையை பாதுகாக்க பல்வேறு மாற்று வழிகளை அரசு உருவாக்கி உள்ளது. பறவைகளை துரத்துவதற்கு பறவை வலைகள் அமைக்க, தமிழக அரசு அதிகளவில் மானியம் வழங்கி வருகிறது. 1.25 ஏக்கருக்கு பறவை வலைகள் அமைக்க 50 ஆயிரம் ரூபாய்க்கு மேல் மானியம் வழங்கப்படுகிறது. மானிய உதவிகளை பெற விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுகலாம்,என்றார். திராட்சை விவசாயிகள் சங்க நிர்வாகி இருளாண்டி கூறியதாவது: பறவைகளை துரத்த மார்க்கெட்டில் கிடைக்கும், அரசு அனுமதி வழங்கிய சாதாரண மருந்துகளையே பயன்படுத்துகிறோம். இந்த மருந்துகளின் வாசனை சில பறவைகளுக்கு ஒத்துக்கொள்ளாமல் அவைகள் பழங்களை சாப்பிட வருவதில்லை. மற்றபடி நாங்கள் ஆபத்தான, வீரியம் மிகுந்த தடை செய்யப்பட்ட மருந்துகளை பயன்படுத்துவதில்லை. அப்படி பயன்படுத்தினால், மருந்து தெளிப்பவர்களே நோயாளியாகி விடுவார்கள் என்பது எங்களுக்கு தெரியும். எங்கள் தோட்டத்து பழங்களை நாங்களே சாப்பிடுகிறோம். உறவினர்களுக்கு கொடுத்து அனுப்புகிறோம். எங்கள் வீட்டு குழந்தைகள் சாப்பிடுகின்றன. நாங்கள் எல்லோரையும் எங்கள் குடும்பத்தினராகவே நினைத்து செயல்படுகிறோம். வழக்கமாக விவசாயத்திற்கு பயன்படுத்தும் மருந்துகளையே, நாங்களும் பயன்படுத்துவதால் மக்கள் திராட்சையை தாராளமாக சாப்பிடலாம்,என்றார்.

## ஒரு நாள் பெய்த மழை தொடருமா மானாவாரி விவசாயிகள் எதிர்பார்ப்பு

கூடலூர்: கூடலூர் பகுதியில் நேற்று முன்தினம் ஒரு நாள் பெய்த மழை, தொடர்ந்து பெய்யுமா என்ற எதிர்பார்ப்பில், மானாவாரி விவசாயிகள் உள்ளனர். தேனி மாவட்டத்தில் மழையை நம்பியுள்ள, மானாவாரி விவசாயம் அதிகளவில் உள்ளது. கடந்த சில மாதங்களாக, முற்றிலும் மழையே இல்லாததால், மானவாரி விவசாயம் முழுமையாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மானாவாரி விவசாயம் நடந்த நிலங்கள் அனைத்தும், காய்ந்து மண் இறுகிய நிலையை அடைந்தது. இப்பகுதியில் மீண்டும் விவசாயம் செய்ய வேண்டுமெனில், பல முறை உழவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் தேனி மாவடத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இது மானவாரி விவசாயிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இருந்த போதிலும், தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே, விவசாயப் பணியை துவக்க முடியும். வழக்கமாக அடுத்த மாதத்தில் துவங்கும், மானவாரி விவசாயம் தொய்வின்றி நடக்க, ஒரு நாள் பெய்த மழை தொடருமா, என்ற எதிர்பாப்பில் விவசாயிகள் உள்ளனர்.

## கால்நடை வளர்ப்பு தொழில் பாதிப்பு

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மேய்ச்சல் நிலங்கள் குறைந்ததை தொடர்ந்து, கால்நடை வளர்ப்பு தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. தீவன பராமரிப்பு செலவை சமாளிக்க முடியாமல் விவசாயிகள், அடிமாட்டு விலைக்கு கால்நடைகளை விற்பனை செய்ய துவங்கியுள்ளனர்.தமிழகத்தில் கடந்த காலத்தில் உணவு, உரோமம் மற்றும் வேளாண் பணிக்கு விவசாயிகள் ஆடு, மாடுகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டனர். காலப்போக்கில் பால், இறைச்சி மற்றும் அவற்றின் உரோமத்தின் நல்ல வருமானம் கிடைத்ததால், கால்நடை வளர்ப்பு தொழில் மிக பெரிய வர்த்ததொழிலாக மாறியது.இதனால், ஆடு, மாடுகளில் கலப்பின இனப்பெருக்கும் மூலம் கூடுதல் பால், இறைச்சிகள் கொடுக்கும் புதிய வகை ஆடு, மாடுகள் உருவாக்கப்பட்டன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆடு, மாடுகள் வளர்ப்பு மூலம் விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம் கிடைத்ததால், வனப்பகுதிகளையொட்டிய கிராமங்களில் விவசாயிகள், பொதுமக்கள் கால்நடைகள் வளர்ப்பு தொழிலில் முழுநேரம் ஈடுபட்டனர்.

ஓசூர் அடுத்த மத்திகிரியில் ஆசியாவிலே மிகப்பெரிய கால்நடை பண்ணை செயல்படுகிறது. இப்பண்ணையில், உயர் ரக ஆடுகள், மாடுகள் வளர்க்கப்படுகின்றன. புதிய வகை கலப்பின மாடுகள், ஆடுகள் உருவாக்கி விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. மேலும்,

விவசாயிகளுக்கு தேவையான தீவன புல்கள் உற்பத்தி செய்து, மானிய விலையில் வழங்கப்படுகிறது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பாண்டு வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை முற்றிலும் பொய்த்ததால், கடும் வறட்சி காணப்படுகிறது. இதனால், மத்திகிரி கால்நடை பண்ணையிலும் மேய்ச்சல் நிலம், தீவன புல் இல்லாமல் கால்நடைகள் வளர்ப்பு தொழில், உற்பத்தி ஆகியவை மந்தமடைந்துள்ளது.மேலும், யானைகள் இடம்பெயர்வு, மர்ம நபர்கள் ஊடுறுவலை தடுக்க, வனப்பகுதியில் கால்நடைகள் மேய்க்க வனத்துறையினர், தற்போது நிரந்தர தடை விதித்துள்ளனர்.மேலும், கால்நடைகள் காட்டிற்குள் செல்வதை தடுக்க வனப்பகுதியை சுற்றிலும் யானைப்பள்ளம் தோண்டப்பட்டுள்ளன. விவசாயிகள், மலைக்கிராம மக்கள் கால்நடைகளை வனப்பகுதிக்கு மேய்ச்சலுக்கு அழைத்து செல்ல முடியவில்லை.இதனால், இயற்கையாக கால்நடைகள் மேய்ச்சலுக்கு சென்ற நிலை மாறி, கால்நடைகளுக்கு தேவையான தீவன புற்களை விலைக்கு வாங்கும் அவலநிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.இதனால், தீவன பராமரிப்பு செலவை சமாளிக்க முடியாமல், விவசாயிகள் கால்நடைகளை அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்துவருகின்றனர். இதனால், சமீப காலமாக ஓசூர், கெலமங்கலம், ராயக்கோட்டை, கந்திகுப்பம் மற்றும் பாகலூர் மாடு மற்றும் ஆட்டுச்சந்தைகளில் அதிகளவு ஆடு, மாடுகள் விற்பனை வருகின்றன.இந்த மாடுகள், ஆடுகளை வியாபாரிகள், விவசாயிகளிடம் அடிமாட்டு விலைக்கு வாங்கி சென்று கர்நாடகா, கேரளாவில் இறைச்சிக்காக கொள்ளை லாபத்திற்கு விற்பனை செய்கின்றனர். இதனால், மாவட்டத்தில் பராம்பரியமாக விளங்கிய கால்நடை வளர்ப்பு தொழில் அழியும் அபாயத்தில் உள்ளது.

### வேளாண் துறை சார்பில் ராகிஉணவு பொருட்கள் கண்காட்சி

ஓசூர்: ஓசூர் ஆந்திர சமீதியில், வேளாண் துறை சார்பில் ராகி உணவு பொருட்கள் கண்காட்சி நடந்தது.கண்காட்சியில் விவசாயிகள் ராகியில் செய்யப்படும், 40 வகையான உணவு பொருட்களை தயாரித்து வைத்திருந்தனர். வேளாண் உதவி இயக்குனர் நாகராஜ் தலைமை வகித்தார். சப்-கலெக்டர் பிரவீன் நாயர், கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார்.அப்போது, ராகியில் இருந்து செய்யப்படும் உணவு பொருட்கள், அவற்றின் மருத்துவ குணநலன்கள் குறித்து விவசாயிகள் விளக்கி கூறினர். ஒன்றிய சேர்மன் புஷ்பா சர்வேஷ், ஒன்றிய அ.தி.மு.க., செயலாளர் சர்வேஷ், மாவட்ட கவுன்சிலர் சந்திரசேகர், வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

சப்-கலெக்டர் பிரவீன் நாயர் பேசுகையில், ""ராகியில் இருந்து அதிகளவு உணவு பொருட்கள்

தற்போது தயார் செய்யப்படுகிறது. இதனால், ஆண்டுதோறும் ராகியின் தேவை அதிகரித்துள்ளது. அரசு ராகி சாகுபடியை ஊக்குவிக்க அதிகளவு மானிய உதவிகள் வழங்குகிறது. குறைந்த பராமரிப்பு செலவில் கூடுதல் லாபம் ராகி சாகுபடியில் கிடைக்கிறது. அதனால், விவசாயிகள் அரசு மானிய உதவிகளை பயன்படுத்தி ராகி சாகுபடியில் ஈடுபட்டு நல்ல லாபம் பெறலாம், " என்றார்.

### தேயிலை தூள் ஏலத்தில் சரிவு

குன்னூர் : இந்த வார ஏலத்தில் தேயிலை தூள் கிலோவுக்கு ஐம்பது பைசா விலை சரிவு ஏற்பட்டது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் ஏழாம் ஏலம் கடந்த 14 மற்றும் 15ம் தேதிகளில் நடந்தது. இதில், மொத்தம் 14.92 லட்சம் கிலோ தேயிலை தூளில் 83 சதவீதம் விற்பனையானது. இந்த வாரம் கிலோவுக்கு ஐம்பது பைசா விலை சரிவு காணப்பட்டது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக கிராஸ்ஹில் எஸ்டேட் மற்றும் ஹோம்டேல் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 181 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக சாம்ராஜ் எஸ்டேட் தேயிலை தூளுக்கு 271 ரூபாயும் விலை கிடைத்தது. சராசரியாக சாதாரண ரகத்துக்கு 85 ரூபாயிலிருந்து 89 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 85 ரூபாயிலிருந்து 89 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 110 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 21மற்றும் 22ம் தேதிகளில் நடக்கும் 8வது ஏலத்துக்கு மொத்தம் 12.52 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், 9.24 லட்சம் இலை ரகமும், 3.28 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.

### பசுந்தேயிலைக்கு நடப்பாண்டு முதல் கூடுதல் தொகை

மஞ்சூர் : "மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை அங்கத்தினர்கள் வழங்கும் பசுந்தேயிலைக்கு, நடப்பாண்டு, கிலோவுக்கு 50 பைசா வீதம் கூடுதல் தொகை வழங்குவது' என, முடிவெடுக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் உள்ளன. 25 ஆயிரம் பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். இதில், மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலையில், 2,000க்கும் மேற்பட்டோர் அங்கத்தினர்களாக உள்ளனர். தங்கள் தோட்டத்தில் பறிக்கும்

பசுந்தேயிலையை அந்தந்த கொள்முதல் மையங்கள் மூலம், தொழிற்சாலைக்கு வினியோகித்து வருகின்றனர்.

மகாசபை கூட்டம்

அங்கத்தினரின் பயன் கருதி, ஆண்டுக்கொரு முறை மகாசபை கூட்டம் நடத்தப்பட்டு, தொழிற்சாலையின் மேம்பாடு குறித்து விவாதிக்கப்படுகிறது. நடப்பாண்டின் மகா சபை கூட்டம் நேற்று மஞ்சூரில் நடந்தது.தனி அலுவலர் அருணாசலம் வரவேற்றார். மூத்த அங்கத்தினர் மாதாகவுடர் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், தொழிற்சாலை புனரமைப்பு, வளர்ச்சி குறித்து விவாதிக்கப்பட்டது. தொடர்ந்து சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூடுதல் தொகை

இதில்,"தொழிற்சாலை அங்கத்தினர்களுக்கு நடப்பாண்டு, பசுந்தேயிலை கிலோவுக்கு 50 பைசா வீதம், 20 லட்சம் ரூபாய் வரை கூடுதல் தொகை வழங்குவது' என முடிவெடுக்கப்பட்டது. கூட்டுறவு தொழிற்சாலைகளை மேம்படுத்த மாநில அரசு ஒதுக்கியுள்ள 6 கோடி ரூபாயில், மஞ்சூர் தொழிற்சாலைக்கு 38 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; இத்தொகை மூலம், தொழிற்சாலையை சிறந்த முறையில் புனரமைப்பது; உற்பத்திக்கு புதிய டிரையர் வாங்குவது;இலை சேகரிப்பில் தற்போதுள்ள நடைமுறையை பின்பற்றுவது என்பது உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முன்னாள் தலைவர் கக்கமல்லன், ராமன் உட்பட திரளான அங்கத்தினர்கள் பங்கேற்றனர்.

அவசரம் ஏன்?

கூட்டுறவு அங்கத்தினர்களுக்கான, மகாசபை கூட்டம் நடத்த கால அவகாசம் இருந்த நிலையில், முன்கூட்டியே இந்த கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. "விரைவில் கூட்டுறவு தேர்தல் அறிவிக்கப்பட உள்ள நிலையில், நிர்வாக குழுவில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாற்றம் ஏற்படுவதற்கு முன், மகாசபையில் தீர்மானங்களை நிறைவேற்றி விட்டால், நிர்வாக குழு மாறினாலும், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமலுக்கு வரும் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து தான் முன்கூட்டியே மகாசபை கூட்டம் கூட்டப்பட்டுள்ளது' என கூறப்படுகிறது.

## மோட்டார்களை பயன்படுத்த வேண்டிய அவலம் பாசன கால்வாய் அமைத்தும் தண்ணீர் வரவில்லை

மதுராந்தகம்:கடமலைபுத்தூர் ஏரியில், புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதகு மற்றும் பாசன கால்வாய் சரியான முறையில் அமைக்கப்படாததால், பாசனத்திற்கு நீர் வரத்தின்றி விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

அச்சிறுப்பாக்கம் ஒன்றியத்திற்கு உட்பட்டது, கடமலைபுத்தூர் ஊராட்சி. இவ்வூராட்சியில், பெரும்பாலானோர் விவசாயம் செய்து வருகின்றனர். இவ்வூராட்சியில் மொத்தம், 175 ஏக்கரில் ஏரி பாசன நிலம் உள்ளது.

இதில் தற்போது, 80 ஏக்கர் பரப்பளவில், விவசாயிகள் நெல் பயிரை பயிரிட்டுள்ளனர்.

இவ்வூராட்சிக்குட்பட்டுள்ள ஏரியில் இருந்து வரும் நீரை மட்டுமே, இங்குள்ள விவசாயிகள் நம்பி உள்ளனர்.ரூ.20.76 லட்சம்...

இந்த ஏரியில், இரண்டு மதகுகள் மற்றும் ஒரு கலங்கல் உள்ளன. கடந்த பல ஆண்டுகளுக்கு முன் தூர்வாரப்பட்ட இந்த ஏரி, அதன்பின் பராமரிக்கப்படாததால், நீர் மட்டம், 12 அடியில் இருந்து, 7 அடியாக குறைந்துவிட்டது.

சமீபத்தில், ஏரியின் மதகு மற்றும் பாசன கால்வாய் சீரமைப்பதற்காக, 20.76 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது.இப்பணியினை பொதுப்பணி துறை மூலம், தனியாருக்கு டெண்டர் விடப்பட்டு பணி நடந்து. பணியை முடிக்க, 31.03.2013 வரை கால அவகாசம் உள்ள நிலையில், மூன்று மாதங்களுக்கு முன்னரே பணி நிறைவடைந்தது. சிக்கல்ஆனால், ஏரியில் உள்ள மதகு நீர் இருக்கும் தன்மைக்கு ஏற்ப திட்டமிட்டு கட்டப்படாததால், ஏரியின் நீர் மட்டம் குறையும் போது, நீர் பாசன கால்வாயில், பாசன நீர் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள், நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரம் கொண்டு வந்து, ஏரி மதகு அருகே வைத்து, "பைப்' மூலம் கால்வாயில் இறைத்து, தங்களது நிலத்திற்கு கொண்டு செல்லும் அவல நிலை ஏற்பட்டு உள்ளது.

ஆனாலும், மோட்டார் மூலம் இறைக்கப்படும் நீர் பாசன

கால்வாய்கள் மூலம், நிலத்திற்கு சீராக செல்லாததால் விவசாயிகள் வேதனை

அடைந்துள்ளனர்.நடவடிக்கை தேவைஇது குறித்து, அப்பகுதியை சேர்ந்த விவசாயி சந்திரசேகரன் கூறியதாவது:இங்கு, 175 ஏக்கர் நிலம் வைத்திருக்கும், 80க்கும் மேற்பட்ட விவசாயிகள், இந்த ஏரி நீர் மூலம், ஒரு போகம் பயிர் செய்து வருகின்றனர். இந்தாண்டு பருவமழையும் சரியாக பெய்யாததால், ஏரியில் போதிய நீர் இருப்பு இல்லை. முன்பிருந்த மதகு மற்றும் பாசன

கால்வாய்கள் மூலம், ஏரி நீர் விவசாய நிலத்திற்கு சீராக சென்றடைந்தது.ஆனால் பொதுப்பணி துறையினர், ஏரி மதகுகள் மற்றும் பாசன கால்வாய்கள் சீரமைப்பதாக கூறி, தற்போது ஏரி நீர் வெளியேறமுடியாத அளவிற்கு அமைத்துவிட்டனர். கூடுதல் செலவுஇதனால் நாங்கள், நீர் இறைக்கும் மோட்டார்களை வாடகைக்கு கொண்டு வந்து, குழாய் மூலம் நிலத்திற்கு ஏரி நீரை கொண்டு செல்கிறோம்.

பாசன கால்வாய்களும் முறையாக அமைக்கப்படாததால், பாசன நீர் சீராக செல்லாமல் கால்வாய்களில் தேங்கி நிற்கிறது. தற்போது அறுவடை நேரத்தில், நீர்வரத்து இல்லாமல் நாங்கள் பெரும் அவதிப்பட்டு வருகிறோம்.

எனவே, விவசாயிகள் நலன் கருதி உரிய அதிகாரிகள் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

## பள்ளிப்பட்டில் அதிகபட்சமாக 5.2 செ.மீ., மழை பதிவு

திருவள்ளூர்:வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும், இரு நாட்களாக பரவலாக மழை பெய்தது.

கடந்த, 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் மிக அதிகபட்சமாக, பள்ளிப்பட்டில், 5.2 செ.மீ., மழை பதிவாகி உள்ளது.

அதற்கு அடுத்தபடியாக, ஆர்.கே.பேட்டையில், 4 செ.மீட்டரும், செங்குன்றத்தில், 2.6 செ.மீட்டரும், திருத்தணியில், 1.6 செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

## திடீர் மழையால் தர்பூசணி பாதிப்பு :விவசாயிகள் கவலை

மரக்காணம் : மரக்காணம் பகுதியில் பெய்த கன மழையால் தர்பூசணி விலை வீழ்ச்சியடைந்துள்ளது.விழுப்புரம் மாவட்டத்தில் தர்பூசணி பயிர் செய்வதில் மரக்காணம் பகுதி முதலிடம் வகிக்கின்றது. கடந்த இரண்டு வாரங்களாக தர்பூசணி அறுவடை துவங்கி நடந்து வருகிறது.தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட வெளி மாநில பகுதிகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தற்போது ஒரு டன் தர்பூசணியின் விலை 4,000 ரூபாய் முதல் 6,000 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.இதற்கிடையே, நேற்று முன்தினம் மாலை திடீரென மரக்காணத்தைச் சுற்றியுள்ள முருக்கேரி, சிறுவாடி, நகர், வடநெற்குணம், பிரம்மதேசம் உள்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் கன மழை பெய்தது.அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த தர்பூசணி செடிகள் மீது மழை பெய்ததால் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வியாபாரிகள் திடீரென தர்பூசணி வாங்க முன் வரவில்லை.இதனால் தற்போது

தர்பூசணியின் விலை வீழ்ச்சியடைந்து, ஒரு டன் 3,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் மழை பெய்தால் விலையும் குறையும். அறுவடைக்கு சில வாரங்கள் உள்ள தர்பூசணி செடிகளும் பாதிக்கும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## இடைப்பாடி பகுதியில் கனமழைபுகையிலை பயிர் பெரும் சேதம்

இடைப்பாடி: இடைப்பாடி, கொங்கணாபுரம் பகுதிகளில், நேற்று முன்தினம் பெய்த மழையால், நூற்றுக்கணக்கான ஏக்கர் புகையிலை பயிர்கள் சேதம் அடைந்தது.
சேலம் மாவட்டத்தில், இடைப்பாடி, கொங்கணாபுரம், சமுத்திரம் பகுதிகளில் விளைவிக்கப்படும் புகையிலை தரமானவை. இடைப்பாடி, கொங்கணாபுரம் பகுதிகளில், ஆவணியூர், வெள்ளார் நாயக்கன் பாளையம், போடிநாயக்கன்பட்டி, சமுத்திரம், புதுப்பாளையம், வேம்பனேரி, இருப்பாளி, ஆடையூர் உள்ளிட்ட பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில், புகையிலை பயிரிடப்பட்டுள்ளது.

ஓராண்டாக மழை இல்லாத நிலையிலும், போர்வெல் மூலமும், கிணற்றுத் தண்ணீர் மூலமும் வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சி, புகையிலையை, விவசாயிகள் நன்கு பராமரித்து வந்தனர்.இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு பெய்த பலத்த மழையால், மேற்குறிப்பிட்ட பகுதிகளில் விளைந்த, நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் புகையிலைகள் நாசமாகின. பல இடங்களில், அறுவடைக்கு தயாராக இருந்த புகையிலைகள், சாய்ந்து மண்ணோடு மண்ணானது. அறுவடை செய்து, காய வைக்கப்பட்டிருந்த புகையிலை பயிர்களும், மழையில் நனைந்து சேதமடைந்தது.கொங்கணாபுரம் பகுதியில், சமுத்திரம், புதுப்பாளையம், வேம்பனேரி, சடையம்பாளையம், தாதாபுரம் பகுதிகளில் இருந்த புகையிலை பயிர்கள் பெரும் சேதமடைந்தது. விவசாயிகளுக்கு, 75 லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.எனவே, தமிழக அரசு, மழையால் சேதமடைந்த பயிர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ரூ.22 லட்சம் மதிப்பில் மஞ்சள் ஏலம்நாமகிரிப்பேட்டை விவசாயி மகிழ்ச்சி

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், ஒரே நாளில், 22 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது.
ராசிபுரம் அருகே நாமகிரிப்பேட்டையில் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உள்ளது. வாரந்தோறும் செவ்வாய் கிழமை மஞ்சள் ஏலம் நடத்தப்படும். நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி,

பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் தங்கள் மஞ்சளை ஏலத்திற்கு கொண்டுவருவர்.

சேலம், ஈரோடு, திருச்சி போன்ற பல்வேறு மாவட்டம் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று மஞ்சளுக்கு விலை நிர்ணயம் செய்வர். கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தில், 416 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.அதில், 65 கிலோ எடை கொண்ட விரலி ரகம் மஞ்சள் மூட்டை அதிகபட்சமாக, 7,599 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 5,911 ரூபாயக்கும் ஏலம் விடப்பட்டது. அதுபோல் குண்டு ரகம் அதிகபட்சமாக மூட்டை, 6,069 ரூபாய்க்கும், குறைந்தபட்மாக, 4,499 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது.பனங்காலி மஞ்சள் அதிகபட்சமாக, 14 ஆயிரம் ரூபாயக்கும், குறைந்தபட்சமாக, 13, 889 ரூபாய்க்கும் ஏலம் விடப்பட்டது. ஒரே நாளில், 22 லட்சம் ரூபாய் மதிப்பில் மஞ்சள் ஏலம் நடந்தது. இது விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு நிவாரணம் விவசாயிகள் சங்கம் மறியல் போராட்டம் அறிவிப்பு

கடலூர் : அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வலியுறுத்தி நாளை (20ம் தேதி) மற்றும் 21 ஆகிய தேதிகளில் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ரயில் மறியல், சாலை மறியல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக் குழுக் கூட்டம் கடலூரில் நடந்தது. மாநிலத் தலைவர் கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். அகில இந்திய விவசாய சங்க பொதுச் செயலர் வரதராஜன், மாநில பொதுச் செயலர் சண்முகம், விவசாய தொழிலாளர் சங்க மாநில பொதுச் செயலர் மணி, மாநிலக்குழு உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வரும் நவீன தாராள மயக்கொள்கையால் அனைத்து பிரிவு மக்களும் பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகள் தற்கொலை அன்றாட நிகழ்வாக உள்ளது. விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையில் மத்திய அரசின் செயல்பாடுகள் இருக்க வேண்டும்.பெட்ரோல், டீசல் எரி பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும், விவசாய பொருட்களுக்கு கட்டுப்படியான விலையை தீர்மானிப்பது, உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். அனைவருக்கும் வீட்டு மனை வழங்க வேண்டும். தமிழக அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரணம், பயிர்க் கடன் தள்ளுபடி; தண்ணீர் இன்றி தரிசாக போடப்பட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு; பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வலியுறுத்தி நாளை (20ம் தேதி) மற்றும் 21 ஆகிய தேதிகளில் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு விவசாயிகள்

சங்கம் சார்பில் ரயில் மறியல், சாலை மறியல் செய்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாவட்டத் தலைவர் மாதவன் நன்றி கூறினார்.

## மாட்டுச்சந்தைக்கு வரத்து இல்லை : ரூ.6 கோடி இழப்பு ஏற்படும் அபாயம்

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில், இன்று கூடும் மாட்டு சந்தைக்கு, மாடுகள் வரத்து இல்லாததால், வெறிச்சோடி காணப்படுகிறது. இதனால், ஆறு முதல் ஏழு கோடி ரூபாய் வரை வர்த்தக இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.தமிழகத்தில், உள்ள மாட்டு சந்தைகளில், ஏலம் எடுக்கப்படும் மாடுகள் லாரிகள் மூலம் கேரளாவுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இதில், லாரிகளில் ஆறு முதல் ஏழு மாடுகள் வரையும், வேனில், மூன்று மாடுகளும் மட்டுமே கொண்டு செல்ல அம்மாநில அரசு அனுமதிக்கிறது.தமிழக - கேரள எல்லை வரை, அதிக எண்ணிக்கையில் கொண்டு செல்ல மாடுகள், கேரளாவுக்குள் செல்லும் போது, இரண்டு வாகனங்களுக்கு மாற்றப்பட்டு கொண்டு செல்லப்படுகிறது.கேரள எல்லையில் உள்ள போலீசார், இதைக்கண்டுபிடித்தால், அபராதம் விதிப்பது, மாடுகளை பறிமுதல் செய்வது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடுவதால், வியாபாரிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். மாடுகளை கொண்டு செல்வதில், ஒரு சில அரசியல் கட்சிகளும் ஆதாயம் தேடி, வியாபாரிகளுக்கு இடையூறு செய்கின்றன. இதை கண்டித்து, கேரள வியாபாரிகள், நேற்று முன்தினம் முதல் காலவரையற்ற "ஸ்டிரைக்'கில் ஈடுபட்டுள்ளனர்.தமிழகத்தில், தர்மபுரி உட்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்து, மாட்டு சந்தைகளுக்கும், நேரடியாக கேரளாவுக்கு மாட்டுகளை கொண்டு செல்வதை நிறுத்தியுள்ளனர்.பொள்ளாச்சியில், இன்று (19ம் தேதி) கூடவுள்ள மாட்டு சந்தைக்கு, இதுவரை மாடுகள் வரத்து முற்றிலும் இல்லை. இதனால், சந்தை கூடுவது சிக்கல் ஏற்பட்டுள்ளது. மேலும் வர்த்தகம் பாதிக்கப்பட்டு, ஆறு முதல் ஏழு கோடி ரூபாய் வரை வர்த்தக இழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.கேரளா, பொள்ளாச்சி மாட்டு வியாபாரிகள் கூறுகையில், "தமிழகத்தில் ஏலம் எடுக்கும் மாடுகளை, கேரளாவுக்குள் கொண்டு செல்ல வாகனங்களை பொறுத்து, எல்லை போலீசார் லஞ்சம் கேட்கின்றனர். இது குறித்து அதிகாரிகள் புகார் தெரிவிக்க முடியாத நிலை உள்ளது. இந்த நிலை மாறும் வரை, காலவரையற்ற "ஸ்டிரைக்'கில் இறங்கியுள்ளோம். தமிழகத்தில், பெரும்பாலான பகுதிகளில், மாட்டு சந்தைகள் இன்று (நேற்று) செயல்படவில்லை. இதனால், பொள்ளாச்சிக்கு மாடுகளை கொண்டு வரவில்லை. இதில், இழப்பு ஏற்பட்டாலும், பிரச்னைக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும்,' என்றனர்.

## நாட்டின் சர்க்கரை உற்பத்தி166 லட்சம் டன்னாக வளர்ச்சி



புதுடில்லி:நடப்பு 2012-13ம் சந்தைப்படுத்தும் பருவத்தின் (அக்.,-செப்.,), சென்ற 15ம் தேதி வரையிலான காலத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 165.90 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது.இது, கடந்த பருவத்தின், இதே காலத்துடன் ஒப்பிடும் போது, 2.7 சதவீதம் அதிகம் என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.மதிப்பீட்டு காலத்தில், மகாராஷ்டிரா மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 3 சதவீதம் வளர்ச்சி கண்டு, 57.80 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. அதேசமயம், உத்தர பிரதேச மாநிலத்தின் சர்க்கரை உற்பத்தி, 4 சதவீதம் குறைந்து, 43.60 லட்சம் டன்னாக உள்ளது.

மேலும், தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி, 3 சதவீதம் உயர்ந்து, 7.80 லட்சம் டன்னாகவும், ஆந்திராவில் இதன் உற்பத்தி, 1 சதவீதம் அதிகரித்து, 7.30 லட்சம் டன்னாகவும் உள்ளது. இவை தவிர, கர்நாடகா, 28.30 லட்சம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்துள்ளது.நடப்பு சந்தைப்படுத்தும் பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 24.30 கோடி டன்னாக இருக்கும் என, "இஸ்மா' மதிப்பிட்டுள்ளது. எனினும், இது, கடந்த பருவத்தின் உற்பத்தியை காட்டிலும், 20 லட்சம் டன் குறைவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

19.02.2013 A.M

## மழை இல்லாததால் வாடும் பயிரை கண்டு வருந்தும் விவசாயிகள்

பழநி, : பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. இக்கிராமங்களின் விவசாயம் இப்பகுதியில் உள்ள அணை களை நம்பியும், அணை களில் இருந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களை நம்பியுமே இருந்து வருகிறது. இப்பகுதியில் நடவு காலத்திற்கு பின் மழை பெய்யாத தால் விவசாய நிலங்களின் நீர்ப்பாசனம் அணைகளை நம்பியும், அணைகளில் இரு ந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களையுமே நம்பியிருக்க வேண்டி இருந்தது.

போதிய மழையில்லாததால் அணையின் நீர் இருப்பு வெகுவாக குறைந்து விட்டது. குடிநீருக்கே சிக்கலான சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் விவசாயத்திற்கு போதியளவு நீர் திறக்க முடியாத சூழல் நிலவுகிறது. இதனால் அணைகளின் மூலம் நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களும் நீரின்றி வறண்டுள்ளன. பழநி பகுதியில் பாலசமுத்திரம், வையாபுரி கண்மாய் பாசன நிலங்களில் சுமார் 150 ஹெக் டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் நீரின்றி வாடி வருகின்றன. மயிலாடும்பாறை பகுதியில் விவசாயிகள் சாக்கடை நீரை சேமித்து மின்மோட்டார் மூலம் வயலுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

இதுகுறித்து பழநி வேளாண் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, விவசாயிகள் மழையை நம்பி மட்டுமே பயிரிட்டனர். மோட்டார் வைத்திருப்பவர் கிணற்றுப்பாச னம் மூலம் ஓரளவு தப்பித்து கொள்ள வாய்ப்பு உள்ளது. அத்தகைய வசதி இல்லாதவர்கள் கைபம்பு (ஹேண்ட் ஸ்பேரயர்) மூல ம் தண்ணீரைத் தெளித்தால் கூட அப்பயிர் சுமார் 10 முதல் 15 நாள் வரை தாங் கும். வாட துவங்கியிருக்கும் இப்பயிர்களின் நெல்மணி கள் இனி விதை நெல்லிற்கு உகந்ததாக இருக் காது. உணவிற்கான அரிசி யாக மட்டுமே பயன்தரும். அது வும் முழு அரிசியாக கிடை க்காமல் குருணை யாகவே கிடைக்கும்என்ற னர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், கண்மாய்களில் தண்ணீர் இல்லாத தால் மழை பெய்தால்

மட்டு மே நெற்பயிர்களை காப் பாற்ற முடியும். அது வும் இன்னும் ஓரிரு நாட் களில் பெய்ய வேண்டும். இல்லையென்றால் நெற்பயிர்கள் கருகிவிடும்என்றனர்.

## பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்துவது எப்படி? வேளாண் துறை ஆலோசனை

பழநி, : பார்த்தீனிய செடிகளை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.

பார்த்தீனிய செடி வெப்ப மண்டத்தில் வள ரும் ஒருவித செடியாகும். இச்செடியில் உற்பத்தியா கும் விதை அதிக நாட்கள் உறக்க நிலையில் இருக்கும் பண்புடையது. அளவில் சிறியதாக இருக்கும் இச்செடியின் விதையானது காற்றில் அதிக தூரம் பரவக்கூடியது. ஒரு செடியில் இருந்து ஒரு வருடத்தில் சுமார் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் விதைகள் வரை பரவும் தன்மையுடையது. இந்த விதைகள் முதிர்ச்சி அடையாத பருவத்திலும் முளைக்கும் தன்மை உடை யது.

கடுமையான கோடைகாலத்தில் இச்செடி கருகியது போன்ற தோற்றமளிக்கும். ஆனால், மழைக்காலத்தில் செடி நன்கு வளர்ந்திருக்கும். மேலும், ஒரு வருடம் முழுவதும் பூக்கும் தன்மை உடையது. பார்த்தீனிய செடிகளால் மனிதர்கள், கால்நடைகள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன. சுவாசக் கோளாறு ஏற்படும் வாய்ப்பு அதிகமுள்ளது. இதனை கட்டுப்படுத்தும் முறை குறித்து வேளாண் துறையினர் கூறியதாவது: பார்த்தீனிய செடிகளை பூப்பதற்கு முன்பே கையினால் பிடுங்கி அழித்து விடலாம். பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ள அனை வரும், ஒன்று சேர்ந்து ஒரே சமயத்தில் அழித்தால் அதிகளவில் முழுமையாக கட்டுப்படுத்த முடியும். இந்த செடி மூலம் அதிகளவில் நிலம் பாதிக்கப்பட்டிருந் தால் பயிர் சுழற்சி முறையில் செண்டு மல்லிகை பூச்செடி யை பயிர் செய்வதன் மூலம் இதன் வளர்ச்சியை கட்டுப்படுத்தலாம்.தரிசு நிலங்கள், இருப்பு பாதைகள், சாலையோரங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள பார்த்தீனிய செடிகளை கட்டுப்படுத்த 1 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் அளவில் உப்பை கரைத்து செடிகளின் மீது தெளிக்க வேண்டும். களைக்கொல்லிகளை உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் பெருமளவு பார்த்தீனிய செடிகளை குறைக்கலாம். பார்த்தீனிய செடி அதிகளவில் விதைகளை உற்பத்தி செய்யக்கூடியது. எனவே, இச்செடிகளை சேகரித்து ஊட்டமேற்றிய உரமாக மாற்றி பயன்படுத்தலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

## நீர்வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணை நீர்மட்டம் 3 நாளில் ஒரு அடி உயர்வு



மேட்டூர் : மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால் நீர்மட்டம் 3 நாட்களில் ஒரு அடி உயர்ந்துள்ளது. டெல்டா பகுதியில் கருகும் பயிரை காப்பாற்ற, காவிரி நீரை திறந்து விடக்கோரி தமிழக அரசு சார்பில் தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், 2.44 டிஎம்சி நீரை திறந்து விட கர்நாடகத்திற்கு உத்தரவிட்டது. அதன்படி, கடந்த 9ம் தேதி கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து கர்நாடகம் நீரை திறந்து விட்டது. இந்த நீர் கடந்த 15ம் தேதி மேட்டூர் அணையை வந்தடைந்தது.

அணையில் இருந்து ஆரம்பத்தில் 2 ஆயிரம் கனஅடி நீர் திறந்து விட்ட கர்நாடகம், நேற்று முன்தினம் நீர் திறப்பை 5 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனால், தமிழகத்திற்கு வரும் காவிரி நீர் அளவிடப்படும் பிலிகுண்டுலுவில் கடந்த 16ம் தேதி வினாடிக்கு 1,763 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று முன்தினம் பிற்பகல் வினாடிக்கு 3,700 கனஅடியாக அதிகரித்தது.

நேற்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 3,418 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. தண்ணீர் வரத்து அதிகரித்தன் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து டெல்டா மாவட் டங்களின் குடிநீர் தேவைக்காக திறக்கப்படும் நீரின் அளவை வினாடிக்கு 100 கனஅடி அதிகரித்து வினாடிக்கு 600 கனஅடி வீதம் திறந்து விடப்படுகிறது. நீர்மட்டம் 30.65 அடியாகவும், நீர் இருப்பு 7.78 டிஎம்சியாகவும் உள்ளது.

கடந்த 15ம் தேதி, கர்நாடகம் திறந்துவிட்ட நீர், மேட்டூர் அணைக்கு வந்தபோது, அணையின் நீர்மட்டம் 29.57 அடியாக இருந்தது. கடந்த 3 நாட்களின் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 1.08

அடி உயர்ந்துள்ளது. கேஆர்எஸ் அணையில் இருந்து நீர் திறப்பு அதிகரிப்பால் ஒகேனக்கல்லில் வறண்டு கிடந்த அருவிகளில் பல மாதங்களுக்கு பின்னர் நீர் கொட்டுகிறது. இதனால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## சென்னைக்கு குடிநீர் தரும் வீராணம் ஏரிக்கு காவிரி நீர் வந்தது



காட்டுமன்னார்கோவில் : மேட்டூரில் திறந்து விடப்பட்ட காவிரி நீர் வீராணம் ஏரிக்கு வந்தது. கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவிலில் உள்ள வீராணம் ஏரிக்கு கீழணையிலிருந்து வடவாறு வழியாக காவிரி நீர் வரும். இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததாலும் கர்நாடக அரசு தண்ணீர் திறக்காததாலும் வீராணம் ஏரிக்கு நீர்வரத்து இல்லாமல் இருந்தது. இதனால் ஏரியின் முழு கொள்ளளவு 47.50 அடி ஒரு முறை கூட நிரம்பவில்லை. இதன் காரணமாக ஏரியின் மூலம் பாசனம் பெறும் 45 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் முற்றிலும் பாதிக்கப்பட்டது. ஏரியில் நீர் வேகமாக குறைந்து வந்ததால் சென்னைக்கு குடிநீர் அனுப்புவதும் நிறுத்தப்பட்டது.

இந்நிலையில் உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் காவிரியில் இருந்து 2.44 டிஎம்சி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்த தண்ணீர் மிகவும் கால தாமதமாக மேட்டூருக்கு வந்தது. மேட்டூரிலிருந்து திறக்கப்பட்ட தண்ணீர் கல்லணைக்கு வந்தடைந்து அங்கிருந்து கொள்ளிடம் ஆற்றின் வழியாக கீழணையில் தேக்கப்பட்டு வீராணம் ஏரிக்கு திறக்கப்பட்டுள்ளது. வினாடிக்கு 200 கனஅடி வீதம் வீராணம் ஏரிக்கு வடவாறு வழியாக நேற்று வந்தது. இந்த தண்ணீர் தொடர்ந்து 10 அல்லது 15 நாட்களுக்கு வந்தால் மட்டுமே ஏரியின் நீர்மட்டம் உயரும் என கூறப்படுகிறது. தற்போது ஏரியின் நீர்மட்டம் 39.30 அடி உள்ளது.

## சர்க்கரை மீது கூடுதல் வரி உணவு அமைச்சகம் பரிந்துரை



புதுடெல்லி : சர்க்கரை மீதான உற்பத்தி வரியை கிலோவுக்கு ரூ.1.50 உயர்த்த மத்திய உணவு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. இதற்கு வேளாண்மை அமைச்சர் சரத் பவார் ஆதரவு தெரிவித்துள்ளார். மத்திய அரசின் கட்டுப்பாட்டில் சர்க்கரை உற்பத்தி உள்ளது. அதாவது, லெவி முறையின் கீழ் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தனது உற்பத்தியில் 10 சதவீதத்தை, அரசுக்கு கிலோ விலை ரூ.19.04க்கு அளிக்க வேண்டும். அதேசமயம், ஆலையில் சர்க்கரை விற்பனை விலை தற்போது ரூ.31 ஆக உள்ளது.

லெவி முறையில் பெறப்படும் சர்க்கரையை, மத்திய அரசு, பொது விநியோகத் திட்டத்தில் மக்களுக்கு கிலோ ரூ.13.50க்கு அளிக்கிறது. இதன் மூலம், அரசுக்கு ஆண்டுக்கு ரூ.2,500 கோடி மானியச் சுமை ஏற்படுகிறது. இந்நிலையில், சர்க்கரை மீதான லெவியை முற்றிலும் நீக்குவது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. அத்துடன் மானியச் சுமையை சமாளிப்பதற்காக சர்க்கரை மீதான உற்பத்தி வரியை(கலால் வரி) உயர்த்துவதற்கு மத்திய உணவு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது. தற்போது குவிண்டாலுக்கு வரி ரூ.98 வசூலிக்கப்படுகிறது. இந்த வரியை கிலோவுக்கு ரூ.1.50 உயர்த்த திட்டமிட்டுள்ளது.

இதற்கு வேளாண்மை அமைச்சகம் ஆதரவு தெரிவித்துள்ளது. இது பற்றி, வேளாண்மை துறை அமைச்சர் சரத்பவார் நேற்று கூறுகையில், 'சர்க்கரை மீதான வரியை உயர்த்தும் உணவு அமைச்சகத்தின் திட்டத்தை நாங்கள் ஆதரிப்போம்' என்றார். உற்பத்தி அதிகரிப்பு: கடந்த அக்டோபர் முதல் பிப்ரவரி 15ம் தேதி வரையான காலத்தில் சர்க்கரை உற்பத்தி 2.7% அதிகரித்து மொத்தம் 1.65 கோடி டன்னாக உள்ளது. இதில் அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 57.8 லட்சம் டன், உ.பி.யில் 43.6 லட்சம் டன், தமிழகத்தில் 7.8 லட்சம் டன், ஆந்திராவில் 7.3 லட்சம் டன் என உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

## கருகிய பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் மக்கள் குறைதீர்க்கும் நாளில், விவசாயிகள் மனு

தூத்துக்குடி

மழை இல்லாமல் கருகிய பயிர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் மனு அளித்தனர்.

மக்கள்குறை தீர்க்கும் கூட்டம்

தூத்துக்குடி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட வருவாய் அலுவலர் அமிர்தஜோதி தலைமை தாங்கினார். கூட்டத்தில் பொது மக்கள் தங்கள் குறைகளை மனுக்களாக மாவட்ட வருவாய் அலுவலரிடம் வழங்கினார்கள்.

விளாத்திகுளம் தாலுகா சிங்கிலிபட்டி, கல்குழி கிராமத்தை சேர்ந்த விவசாய கூட்டு பொறுப்புக்குழு விவசாயிகள் சக்கையா தலைமையில் 20–க்கும் மேற்பட்டவர்கள் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்தனர். அவர்கள் கலெக்டர் அலுவலகம் முன்பு தரையில் அமர்ந்து தர்ணா போராட்டம் நடத்தினார்கள். தொடர்ந்து மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

ரத்து

நாங்கள் விவசாயம் செய்து குடும்பம் நடத்தி வருகிறோம். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள நிலையில் உள்ளோம். தற்போது மழை இல்லாத காரணத்தால் விவசாயம் செய்த பயிர்கள் கருகி விட்டன. எனவே நாங்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளோம். அரசு வழங்கிய பயிர் நஷ்டஈடு மற்றும் கூட்டுறவு கடன்களை ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரட்சி தேசம் நிறுவனர் சந்தனராஜ் கொடுத்த மனுவில், தூத்துக்குடி மாநகராட்சி 52, 53, 54, 55 ஆகிய வார்டுகளில் காணப்படும் குப்பைகளை முத்தையாபுரத்தின் மையப்பகுதியான பல்க் பஸ் நிறுத்தத்தின் பின்புறமும், முத்தையாபுரம் போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட சண்முகபுரம் பகுதியின் எதிர்புறமான ஊரணி பகுதியில் அதிகப்படியான குப்பைகளை கொட்டுவதால் குப்பை மேடாகி மிகவும் தூர்நாற்றம் வீசுகிறது.

குப்பைகளை தவிர ஆடு, மாடு, கோழி, பன்றி ஆகியவற்றின் கழிவுகளையும் வியாபாரிகள் கொட்டுவதால் மேலும் அதிகமாக தூர்நாற்றம் வீசுகிறது. மேலும் வெயில் காலங்களில் மாநகராட்சி ஊழியர்கள் தீ முட்டுவதாலும் அதிலிருந்து வெளிப்படும் புகையானது முத்தையாபுரம், தங்கம்மாள்புரம் ஆகிய பகுதிகளில் பரவி அங்குள்ள பொது மக்கள், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கண் எரிச்சல், மூச்சு திணறலை ஏற்படுத்துகிறது. எனவே இதில் இருந்து மக்களை காப்பாற்ற குப்பைகளை வேறு இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே முத்தையாபுரம் பகுதியில் பல வருடங்களாக மூடிக்கிடக்கும் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தை இந்த குறிப்பிட்ட பகுதிக்கு கொண்டு வரவேண்டும். மேலும் பொது கழிப்பிட வசதியை ஏற்படுத்தி தர வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருப்பூர் மாவட்டத்தில் மத்திய கால்நடை பராமரிப்புத்துறை செயலாளர் ஆய்வு

திருப்பூர்,

திருப்பூர் மாவட்டத்தில் மத்திய கால்நடை பரா மரிப்புத்துறை செயலா ளர் கோகுல் சந்திர பதி நேற்று ஆய்வு மேற் கொண்டார்.

மத்திய அரசு செயலாளர்

மத்திய அரசின் கால்நடை பராமரிப்புத்துறை செயலாளர் கோகுல் சந்திர பதி தலைமை யில், தமிழக அரசு கால்நடை பராமரிப்புத்துறை செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இயக்குனர் டாக்டர் ஆர்.பழனிச்சாமி ஆகியோர் திருப்பூர் மாவட்டத்தில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் செயல் பாடுகள் குறித்து நேற்று ஆய்வு செய்தனர்.

பல்லடம் ஊராட்சி ஒன்றி யம் சித்தம்பலம் ஊராட்சியில் தமிழக அரசின் இலவச வெள் ளாடுகள் திட்டத்தில் வழங்கப் பட்ட ஆடுகளை பார்வை யிட்டு, இந்த திட்டம் குறித்து பயனாளிகளிடம்

மத்திய அர சின் செயலாளர் நேரில் விசா ரித்தார். ஆடுகளுக்கு தாது உப்புக் கலவை வழங்கவும், புரதசத்துமிகு அகத்தி போன்ற தீவன மர நாற்றுகள் வழங்கவும் அவர் அறிவுரை வழங்கி னார்.

சிறந்த திட்டம்

தமிழக அரசின் திட்டம் மிகச்சிறப்பாக இருப்பதாகவும், இந்தியாவின் பிற மாநிலங்களி லும் செயல்படுத்த இந்த திட் டம் சிறந்த ஒரு திட்டம் என் றும் கூறினார்.
மேலும், பய னாளிகளுக்கு இழந்த ஆட்டுக் கான காப்பீட்டுத் தொகைக் கான காசோலைகளை மத்திய அரசின் செயலாளர் வழங்கி னார்.

இதை தொடர்ந்து, மத்திய அரசின் செயலாளர் கோகுல் சந்திர பதி தலைமையிலான குழுவினர் அய்யம்பாளையம் கிராமத்துக்கு சென்று தீவனப் பயிர் அபிவிருத்தி திட்டப்பணி களை ஆய்வு செய்தனர். பய னாளிகள், இதர விவசாயி களுக்கு புல்கரணைகள் வழங் கவும், உபரித் தீவனத்தை ஊறுகாய்ப்புல் திட்டம் மூலம் சேமித்து செயல்படுத்தவும் அவர் கேட்டுக் கொண்டார்.

கால்நடை மருந்தகம்

மேலும் சாமிக்கவுண்டம் பாளையத்தில் புதிய கால்நடை மருத்துவ நிலையங்கள் கட்டு தல் மற்றும் திறன்படுத்துதல் திட்டத்தின் கீழ் ரூ.11Ñ லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட் டிருந்த கால்நடை மருந்தகக் கட்டிடத்தை திறந்து வைத் தார். அங்கு, செயற்கை முறை விந்தூட்டல், குடற்புழு நீக்கம் ஆகிய பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.அப்போது, அவர் தமிழக அரசின் குறைந்த விலையில் மருந்துகள் கொள் முதல் செய்யும் முறையையும் பாராட்டினார்.

ஆய்வின்போது திருப்பூர் மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ், திருப்பூர் மண்டல இணை இயக்குனர் டாக்டர்சிவபிரகாசம், கோட்ட உதவி இயக்குனர் டாக்டர் பழனிச்சாமி மற்றும் கால்நடை மருத்துவர்கள், சித்தம்பலம் ஊராட்சி தலை வர் செல்வி முருகன், துணைத் தலைவர் குமாரசாமி ஆகி யோர் உடன் இருந்தனர்.

## ஈரோடு மாவட்டத்தில் பரவலான மழை பவானியில் 72 மி.மீட்டர் மழை கொட்டியது

ஈரோடு

ஈரோடு மாவட்டத்தில் அதிகபட்சமாக பவானியில் 72 மி.மீட்டர் மழை கொட்டியது.

பரவலாக மழை

ஈரோடு மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு திடீர் என்று மழை பெய்தது. பலத்த காற்றுடன் பெய்த இந்த மழையில் ஈரோடு பகுதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஈரோடு வ.உ.சி. பூங்கா அருகே ஒரு புளிய மரம் வேரோடு சாய்ந்தது.

சாக்கடை கால்வாய்கள் காட்டாறு போல பெருக்கெடுத்து ஓடியது. கடந்த பல மாதங்களாக தண்ணீர் இன்றி வறண்டு கிடந்த வயல்வெளிகளில் வெள்ளம் தேங்கியது.

ஒரே இரவில் பெய்து முடித்த இந்த மழை ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்து இருந்தது.

நேற்று முன்தினம் பதிவான மழையின் அளவு வருமாறு:–

<u>மழை அளவு</u>

பவானி –72 மி.மீட்டர்

ஈரோடு – 54 மி.மீட்டர்

கோபி– 23 மி.மீட்டர்

அறச்சலூர்– 14 மி.மீட்டர்

ஓலப்பாளையம் – 15 மி.மீட்டர்

கவுந்தப்பாடி – 10 மி.மீட்டர்

குண்டேரிப்பள்ளம்– 4 மி.மீட்டர்

மேற்கண்டவாறு மழை அளவு பதிவாகி உள்ளது. அதிகபட்சமாக பவானியில் 72 மி.மீட்டர் மழையும், ஈரோட்டில் 54 மி.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. குண்டேரிபள்ளத்தில் குறைந்தபட்சமாக 4 மி.மீட்டர் மட்டுமே மழை பதிவாகி உள்ளது.

## விவசாயிகளின் பொருளாதார நிலையை அறிய தேசிய மாதிரி ஆய்வு பயிற்சி வகுப்புகள் சேலத்தில் தொடங்கியது

சேலம்

விவசாயிகளின் பொருளாதார நிலையை அறிய தேசிய மாதிரி ஆய்வு பயிற்சி வகுப்புகள் சேலத்தில் தொடங்கியது.

<u>பயிற்சி வகுப்புகள்</u>

சேலம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறை சார்பில் தேசிய மாதிரி ஆய்வின் 70–வது சுற்றின் பயிற்சி வகுப்புகள் சேலம், கோவை மண்டல அலுவலர்களுக்கு தொடங்கியது. இந்த பயிற்சி வகுப்புகள் 3 நாட்கள் நடக்கிறது.

இதில் 12 மாவட்டங்களை சேர்ந்த ஆய்வில் ஈடுபடும் 50–க்கும் மேற்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு சேலம் மண்டல இணை இயக்குனர் கமலக்கண்ணன், துணை இயக்குனர் கோவிந்தராஜ், தேசிய மாதிரிகள் ஆய்வு திட்டம்(சென்னை) துணை இயக்குனர் கலைச்செல்வன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

<u>ஆய்வுகள்</u>

இந்த பயிற்சி வகுப்பில், கிராம புறங்களில் வசிக்கும் விவசாயிகள் எவ்வளவு நிலம் மற்றும் கால்நடைகள் வைத்துள்ளனர், கடன் மற்றும் முதலீடு, விவசாயம் சார்ந்த குடும்பங்களின் தற்போதைய நிலைமை பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படுகிறது. இந்த ஆய்வு தற்போது தொடங்கி டிசம்பர் மாதம் வரை நடைபெறுகிறது.

இந்த ஆய்வில் சேகரிக்கப்படும் தகவல்களை பயன்படுத்தி நாட்டின் கிராமப்புற பகுதிகளுக்கான நிலம், கால்நடை வளர்ப்பு, நிலம் பயன்பாடு, பயிர் உற்பத்தி, கிராம மற்றும் நகர்புற விவசாயிகளின் பொருளாதாரம் பற்றிய குறியீடுகளும், நம் நாட்டின் கடன் அமைப்பு பற்றி மதிப்பிடவும், கடன் வழங்கும் கொள்கைகளை உருவாக்கிடவும் உதவி புரிகின்றன.

## நடப்பு பருவத்தில் இதுவரை சர்க்கரை உற்பத்தி 2.7 சதவீதம் உயர்வு

புதுடெல்லி,

நடப்பு 2012–13 பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) பிப்ரவரி 15–ந் தேதி வரை சர்க்கரை உற்பத்தி 2.7 சதவீதம் அதிகரித்து 1.66 கோடி டன்னாக உயர்ந்துள்ளது. சந்தைப்படுத்துதல் பருவத்தின் தொடக்கத்திலேயே உற்பத்தி திருப்திகரமாக உள்ளது என இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், சென்ற பருவத்தை விட இந்த பருவத்தில் 24 மில்கள் இயங்கவில்லை. ஆனாலும், சர்க்கரை உற்பத்தி அதிகரித்து உள்ளதாக இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சர்க்கரை உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள மகாராஷ்டிரா மாநிலத்தில் உற்பத்தி 3 சதவீதம் அதிகரித்து 57.80 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அடுத்தபடியாக உத்தரபிரதேசத்தில் சர்க்கரை உற்பத்தி 4 சதவீதம் அதிகரித்து 43.60 லட்சம் டன்னாக உள்ளது. தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 3 சதவீதம் உயர்ந்து 7.80 லட்சம் டன்னாக உள்ளது. மேலும், ஆந்திரபிரதேசத்தில் 1 சதவீதம் உயர்ந்து 7.30 லட்சம் டன்னும், கர்நாடகாவில் 28.30 லட்சம் டன்னும் உற்பத்தியாகி உள்ளது.

சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. அதேசமயம், பயன்பாட்டில் நம் நாடு முதலிடத்தில் உள்ளது. ஆயினும் தேவைப்பாட்டைக் காட்டிலும் உற்பத்தி அதிகமாக உள்ளதால் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள் உள்ளன.

நடப்பு பருவத்தில் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் கரும்பு உற்பத்தி குறைந்துள்ளது. கடந்த பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.60 கோடி டன்னாக இருந்தது. இது, நடப்பு பருவத்தில் 2.43 கோடி டன்னாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் இது தேவைப்பாட்டைக் காட்டிலும் அதிகமாகும்.

## நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் பாசுமதி அரிசி ஏற்றுமதி 31% அதிகரிப்பு

கொல்கத்தா,

நடப்பு நிதி ஆண்டின் முதல் 10 மாதங்களில் பாசுமதி அரிசி ஏற்றுமதி 31 சதவீதம் அதிகரித்து 29 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதேபோல், சாதாரண அரிசி ரக ஏற்றுமதியும் நல்ல அளவில் வளர்ச்சி கண்டுள்ளது. இதே நிலை நீடித்தால், நடப்பு நிதி ஆண்டில் மொத்தம் 1 கோடி டன் அரிசி ஏற்றுமதியாக வாய்ப்புள்ளது.

### விவசாயிகள்

இது குறித்து அகில இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் சங்கத் தலைவர் எம்.பி.ஜிந்தால் கூறுகையில், ''அரிசி ஏற்றுமதியாளர்களுக்கு நடப்பு நிதி ஆண்டு மிக அனுகூலமான ஆண்டாக அமைந்துள்ளது. அரிசிக்கு நல்ல விலை கிடைத்ததால், விவசாயிகள் திருப்தி அடைந்துள்ளனர். இதன் காரணமாக, விவசாயிகளின் வருமானம் உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் சுமார் 36 லட்சம் டன் பாசுமதி அரிசி ஏற்றுமதி செய்ய வாய்ப்புள்ளது'' என்று தெரிவித்தார்.

பாசுமதி அரிசி டன் ஒன்றுக்கு சராசரியாக 1,200 டாலர் என்ற விலையில் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, சென்ற நிதி ஆண்டில் சராசரியாக டன் ஒன்றுக்கு 1,000 டாலராக இருந்தது. அதேபோல், சென்ற நிதி ஆண்டில் ஒரு கிலோ பாசுமதி அரிசிக்கு ரூ.18 மட்டுமே விவசாயிகளுக்கு லாபம் கிட்டியது. ஆனால், நடப்பு நிதி ஆண்டில் ஒரு கிலோவுக்கு ரூ.26 வரை லாபம் கிடைத்துள்ளது. இதன் காரணமாக, எதிர்வரும் நிதி ஆண்டில் பாசுமதி அரிசி உற்பத்தி இரு மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக அகில இந்திய அரிசி ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் விஜய் சேத்தியா தெரிவித்துள்ளார்.

**1 கோடி டன்**

முதல் 10 மாதங்களில், சாதாரண அரிசி ஏற்றுமதி 54 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. வரும் மார்ச் 31–ந் தேதிக்குள் இது 65 லட்சம் டன்னை எட்டும் என்றும், அரிசி ஏற்றுமதி இலக்கான 1 கோடி டன்னை எட்டுவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஆனால், அமெரிக்க வேளாண் துறை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவின் அரிசி ஏற்றுமதி சென்ற ஆண்டை (1.04 கோடி டன்) காட்டிலும் 23 சதவீதம் குறைந்து 80 லட்சம் டன்னாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

**பாகிஸ்தான்**

உலக அளவில் பாசுமதி அரிசி ஏற்றுமதியில் இந்தியாவின் பங்கு 65 சதவீதமாகவும், பாகிஸ்தானின் பங்கு 35 சதவீதமாகவும் உள்ளது. அரியானா, உத்தரபிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில்தான் பாசுமதி அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவில் இருந்து பாசுமதி அரிசியை அதிகமாக இறக்குமதி செய்வதில் சவுதி அரேபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளில் முன்னிலையில் உள்ளன. அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளும் இந்தியாவிலிருந்து பாசுமதி அரிசியை இறக்குமதி செய்கின்றன.